www.tamilarangam.net

# களத்தில்

ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு எவ்வித கால வரம்பையும் நிர்ணயிக்க முடியாது. இறுதி இலட்சியத்தை அடையும்வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

- தமிழீழத் தேசியத்தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 சிலை 18 (01.01.1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (125) அன்பளிப்பு: 60 p

# தமிழீழ விடுதலைப் புலிகள் 96ல் தமது பலத்தை மீளவும் நிரூபித்துள்ளனர்

## ※ சர்வதேச இராணுவச் சமநிலை ஆய்வுகள் கணிப்பு

யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்ததின் பின்னர் சிறிலங்கா தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழித்துவிட்டதாகவும் காட்டுக்குள் அனுப்பி விட்டதாகவும் கடும் பிரச்சாரங்கள் மேற்கொண்டு வந்ததை யாவரும் அறிவர்.

ஆயினும் "இராணுவச் சமநிலைகள்" குறித்த சர்வதேச சஞ்சிகை தனது கணிப்பின்படி "முதலில் சிறிலங்கா இராணுவம் யாழ். குடாநாட்டை கைப்பற்றி விட்டது போல் தோன்றிய போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது மரபுவழி இராணுவ தன்மைகளையும் கெரில்லா தாக்குதல் திறமைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளதாகவே பின்னர் தெரிகிறது" எனக் கருத்து வெளியிட்டுள்ளது.

இதன்மூலம் சிறிலங்காவின் உண்மைக்கு மாறான

தொடர்ச்சி 4 ம் பக்கம்...



"காலங்காலமாக வசித்த பாரம்பரிய மண்ணைத்துறந்து வீடு, காணி சொத்துக்களைக் கைவிட்டு ஏதிலிகளாக இடம் பெயர்ந்து எமது மக்கள் எதிர்கொள்ளும் தாங்கொணாத் துன்பங்கள் எமது நெஞ்சைப் பிளக்கிறது. எனினும் இத்துன்பியல் அனுபவமும் துயரம் நிறைந்த அவலமும் எமது இனத்தின் விடுதலை எழுச்சிக்கு எமது மக்கள் அளித்த மாபெரும் பங்களிப்பாகவே நாம் கருதுகிறோம். ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக கௌரவத்துடன் வாழ்வதற்கு எத்தகைய துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கின்றார்கள்."

வேலுப்பிள்ளை பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

எத்தனை அழுத்தங்களின் பின்னாலும் எழுந்து நிற்கவைக்கும் தேசத்தலைவன் இங்கே இத்தனை சோதனையோ சுதந்திர வாழ்வுக்கென்றே உலகு வியக்கும் 96ன் தேசவரலாற்று நினைவுகள் நடுப்பக்கத்தில்....

## சிங்கள மீனவர்கள் விடுதலைப் புலிகளால் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைப்பு!

### ※ கண்ணீர்மல்க பிரியந்த் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரனுக்கு நன்றி கூறினார்

பதினாறு சிங்கள மீனவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் சர்வதேச சங்கத்திடம் வீடு செல்லுமாறு ஒப்படைக்கப்பட்டனர்.

இவ் வைபவத்திற்கு கடற்புலிகளின் தலைவர் இளையவன் தலைமை தாங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னி நிர்வாகிகள் மீனவர்களை சர்வதேச சட்டப்படி செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

இந்த வைபவத்தில் மீனவர்கள் சார்பாக உரையாற்றிய கே. எஸ். பிரியந்த் தேசியத்தலைவர் பிரபாகரனுக்கு நன்றி கூறியதுடன் கண்ணீர் மல்க தம்மை விடுதலைப் புலிகள் எவ்வாறு அன்புடன் பராமரித்தனர் என்பதனையும் எடுத்து விளக்கினார். தாம் தமிழீழத்தில் வாழ்ந்த காலத்தில் கண்டெடுத்து வளர்த்த நாய் ஒன்றை தம்முடன் கொண்டு செல்ல அனுமதிக்குமாறு இவர் விடுதலைப் புலி நிர்வாகிகளிடம் கேட்டதற்கு அவர்கள் உடன் அனுமதித்தனர்.

இம்மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கையில் சிறிலங்கா கடற்படையினால் தமிழரின் மீன்பிடிப் படகென நினைத்துச் சுடப்பட்டனர். இதனால் படகு உடைந்து நொறுங்கி கடலில் உயிருக்காக தத்தளித்த வேளையில் கடற்புலிகள்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## திருகோணமலையை சிங்களதேசமாக்கும் முயற்சிகளில் சிறிலங்கா தீவிர ஈடுபாடு

வரலாற்றுக்கு முற்பட்ட காலம்முதல் தமிழீழ மக்களின் தாயகமாக சிறப்புற்று விளங்கும் திருகோணமலை நகரில் தமிழர்களின் சனத்தொகை விகிதாசாரத்தை வீழ்ச்சியடையவைத்து சிங்களவர்களின் சனத்தொகை விகிதாசாரத்தை பலமடங்காக அதிகரிக்க வைக்கும் சூழ்ச்சிகள் சிங்கள அரசாங்கங்களின் மேலாதிக்க நடைமுறைத் திட்டங்களுள் ஒன்றாக நிகழ்ந்து வருகின்றன.

இவ்வகையில் சந்திரிகா அரசாங்கம் ஒருபடி மேலே போய் தமிழர்களை ஆயுதப்படை கொண்டு இனங்காணக்கூடிய [illegible]ந்திற்கு உள்ளாக்கி அவர்கள் வீடுகளிலிருந்து விரட்டும் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகிறது.

தற்பொழுது அதிலும் ஒருபடி மேலேபோய் தமிழர் ஒருவர் சந்தை நிர்வாக முகாமையாளராக தெரிவாவதை சிறீலங்கா இராணுவ பிரிகேடியர் குலதுங்க நேரடித்தலையீட்டின் மூலம் தடுத்துள்ளார். சிறீலங்கா இராணுவப் பிரிகேடியர் குலதுங்கா பொதுமக்களின் நிர்வாகத்தில் தலையிடும் உரிமை இராணுவத்திற்கு உண்டு என வேறு அடித்துக் கூறியுள்ளார். இதே நேரத்தில் சிறீலங்காப் படை கடலில் மீன்பிடிக்கும் அனுமதியை

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## மாவீரர் கேணல் கிட்டுவின் தாயார் சதாசிவம் இராசலட்சுமி காலமானார்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் அளப்பரிய பங்காற்றிய மாவீரர் கேணல் கிட்டுவின் தாயார் திருமதி. சதாசிவம் இராசலட்சுமி அவர்கள் 28-12-1996ல் காலமானார்.

ஆற்றல்மிகு அன்புத்தளபதி கிட்டுவை ஈன்று புறந்தந்த இவ் வீரத்தாய் தமிழ்த்தாய்க்குலத்தின் தன்மான விடுதலை உணர்வுக்கு உதாரணமான வாழ்வினை இயற்றிய வீரத்தாயாகப் போற்றப்படுகிறார். 1958ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களின் பல்வேறு விடுதலை முயற்சிகளிலும் தனது பங்களிப்பை நல்கி வந்த இவர் மிக இக்கட்டான காலகட்டமாகிய இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு நேரத்தில் தமிழீழ விடுதலைப்போராளிகளுக்கு இருப்பிடமும், உணவும் அளித்து அவர்களைப் பாதுகாத்த சம்பவங்கள் இவரின் விடுதலைக்கான அர்ப்பணிப்பு உள்ளத்தின் வெளிப்பாடாக அமைந்தன. இவ்வாறு பல வகைகளிலும் தன் வாழ்வினாலும் தமிழீழத் தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு தன்னாலான பங்களிப்பு எல்லாம் நல்கிய இந்த வீரத்தாயின் இறுதிச் சடங்குகள் 30ஆம் திகதி மக்கள் அஞ்சலியுடன் மல்லாவியில் இடம்பெற்றுள்ளன. ✷



புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



# மண்ணை மறவா மக்களின் தமிழீழ தேசியப்பணி

## சிட்னியில் மாவீரர்நாள்

சிட்னியில் மாவீரர்நாள் 30-11-1996 சனிக்கிழமை நடைபெற்றது. தமிழீழ விடுதலைப்புலிகளின் அவுஸ்திரேலிய, நியூசிலாந்துப் பிரதிநிதி திரு.தி.ஜெயக்குமார் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்கள். இதன்பின் ஒருமணித் துளி அமைதி வணக்கம் செலுத்தப் பட்டது. மாவீரர் டயஸ் கந்தசாமியின் சகோதரர் தனபாலசிங்கம் ஈகைச் சுடரை ஏற்றிவைத்தார். ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வரிசையாக நின்று உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு மலர்தீப அஞ்சலி செய்தார்கள். செல்வி யதுகிரி லோகதாசன் மாவீரர்களைப் பற்றி உரையாற்றினார். "மாவீரர் புகழ் பாடுவோம்", "மாவீரர் யாரோ என்றால்" ஆகிய பாடல்களுக்கு சிறுமிகள் நடனம் ஆடினர். திரு.தி.ஜெயக்குமார் அவர்கள் உரையாற்றினார். திருமதி.மனோ யோகேந்திரன் மாவீரர் பற்றிக் கவிதை வாசித்தார். அதனை யடுத்துப் பாடல் இடம் பெற்றது. சிட்னி தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தின் 'உயிர்ச் சிலைகள்' நாடகமும், மெல்பேர்ன் தமிழர் கலை பண்பாட்டுக்கழகத்தின் 'சந்தனக்காடு' நாடகமும் நடைபெற்றன. திரு.தி.ஜெயக்குமார் அவர்கள் தமிழீழத் தேசியக்கொடியை இறக்கி வைத்ததுடன் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

### உலகத்தமிழர் இயக்கம் - யேர்மனி நடாத்திய பொதுத்தேர்வு

*ஒரே நாளில் 25 பரீட்சை நிலையங்களில்*
*1629 தமிழ் மாணவர் தேர்வுக்குத் தோற்றினர்.*

14.12.1996 சனிக்கிழமை அன்று உலகத்தமிழர் இயக்கம்-யேர்மனி இந்த வருடத்திற்கான பொதுத்தேர்வை நடாத்தியது. யேர்மனியின் அனைத்துப் பாகங்களிலும் உள்ள மாணவரின் வசதி கருதி இருபத்தைந்து நகரங்களில் பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. 1629 மாணவர்கள் தேர்வுக்குத் தோற்றி யிருந்தனர்.

காலை 9.30 மணிக்கு தேர்வு ஆரம்பமானது. இரண்டாம் கல்வி யாண்டில் இருந்து பத்தாம் கல்வியாண்டு வரை தமிழ், சமூகக் கல்வி ஆகிய இரு பாடங்களுக்கும் தனித்தனியே வினாத்தாட்கள் தயாரிக்கப்பட்டு ஒரே நேரத்தில் நடாத்தப்பட்ட யேர்மனி தழுவிய பொதுத்தேர்வாக இது அமைந்தது.

வருடாவருடம் உலகத்தமிழ் இயக்கம் நடாத்திவரும் இப்பொதுத் தேர்வில் ஒவ்வொரு வருடமும் தோற்றும் மாணவர் தொகை அதி-கரித்துக் கொண்டே வருகின்றது.

உலகத்தமிழர் இயக்கம்-யேர்மனியால் பாடப்புத்தகங்கள் தயாரிக் கப்பட்டு பாடத்திட்டம் வரையறுக்கப்பட்டு அவற்றை உலகத்தமிழர் இயக்கம்-யேர்மனியால் நடாத்தப்படும் தமிழாலயம் எனப்படும் 97 தமிழ்ப் பாடசாலைகள் மூலம் கற்பித்து பொதுவான வினாத்தாள் தயாரிக்கப்பட்டு தகுதிகாண் பரீட்சையாக இதனை நடாத்தி வருகின்றனர். இந்தப் பொதுத்தேர்வில் சித்தியெய்தும் மாணவரே 1997ம் ஆண்டு தமிழாலயங்களில் வகுப்பேற்றப்படுவர்.

25 பரீட்சை நிலையங்களிலும் ஒரேநாளில் கண்காணிப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு, வினாத்தாட்கள் வினியோ கிக்கப்பட்டு தேர்வு நடாத்தப்பட்ட நேர்த்தி பாராட்டப்படவேண்டியது.

உலகத்தமிழர் இயக்கம்-யேர்மனியின் இந்தப்பாரிய திட்டத்தைச் செயற்படுத்திய அதன் செயற்பாட்டாளர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியதுடன் தமிழார்வத்துடன் பிள்ளைகளைப் பயிற்றுவித்து பரீட்சையிற் தோற்றச் செய்த பெறறோரும் வாழ்த்தப்பட வேண்டியவரே.

வெளிவாரி மாணவர்களும் தேர்வில் தோற்றும் விதத்தில் விண்ணப் பங்கள் கோரப்பட்டு, அனைத்துத் தமிழர்களும் பயனடையும் பாங்கோடு இந்தப் பொதுத்தேர்வு நடாத்தப்படுவது ஒரு சிறப்பாகும்.

வெளிநாடுகளில் வளரும் எமது எதிர்காலச் சந்ததியினர் தமிழை மறவாத தமிழராக வளர இதுபோன்ற கடின உழைப்போடு கூடிய பணி அனைத்து நாடுகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யேர்மனிக்கிளை

Tamils Rchabilitation Organization
Tamilische Rehabilitation Organisatoin e.V
(Gemeinnutzig annerkannt durch Finanzamt Monchengladbach
St.Nr: 12701831803)

#### அதிஸ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

07-12-1996ம் திகதி Mulheim நகரத்தில் நடத்தப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு:

முதலாவது பரிசுக்குரிய இலக்கம்: 5726 திலகேஸ்வரி
இரண்டாவது பரிசுக்குரிய இலக்கம்: 1747 சுரேஸ்குமார்
மூன்றாவது பரிசுக்குரிய இலக்கம்: 5716 இந்திரகுமார்

மற்றும் 25 ஆறுதல் பரிசுகளின் இலக்கங்கள்

0075, 4804, 620, 1569, 3844, 1534, 2857, 1488, 1203, 4830, 4085, 2065, 4886, 1727, 877, 3362, 5946, 3255, 2496, 0688, 2197, 5001, 675, 2925, 5834

இவர்களுக்குரிய பரிசை உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 02166/58508

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், யேர்மனிக்கிளை

### அவுஸ்திரேலியவில் தேசிய மாவீரர் நாள் 96

அவுஸ்திரேலியத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் ஒழுங்கு செய்யப் பட்ட மாவீரர்தின நிகழ்வு விட்டோரியா மாநிலத்தில் மெல்பேர்ன் கிளன்வேவெளி இடைநிலை கல்லூரியில் அமைந்துள்ள TRESEDAR மண்டபத்தில் 07-12-96 சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு ஆரம்பமானது.

விழா மண்டபத்தின் நுளைவாயிலில் அமைக்கப் பட்டிருந்த அலங்கார வளைவு தமிழீழ விடுதலைப் போராட் டத்தின் நிகழ்வுகளைச் சித்தரிக்கும் வகையில் அமைந்திருந்தது. நுளை வாயிலுடன் இணைந்து விசேடமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில் மாவீரர் உருவப்படங்கள் வரிசையாக வைக்கப் பட்டிருந்தன. அண்மையில் பாரிஸ் மாநகரில் சிறிலங்கா அரசின் சூழ்ச்சிய-னால் படுகொலை செய்யப்பட்ட சர்வதேச நிதிப்பொறுப்பாளர் நாதன், ஈழமுரசு ஆசிரியர் கஜேந்திரன் ஆகி யோரின் படங்கள் விசேடமாக அமைக் கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்டி ருந்தன. அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நிர்மூலமாக் கப்பட்ட முல்லைத்தீவு இராணுவ முகாமின் மாதிரி உருவம் கண்ணைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டிரு ந்தமை பார்ப்போரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

நிகழ்ச்சி நிரலின் ஆரம்ப நிகழ்ச்சியாக மாவீரரின் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அடுத்து இடம்பெற்ற தேசியக்கொடி ஏற்றும் நிகழ்வில் அவுஸ்திரேலியத் தேசியக் கொடியை மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த வண. ரிச்சாட் வூட்டனும், தமிழீழத் தேசியக்கொடியை விடுதலைப்புலிகளின் அவுஸ்திரேலியப் பிரதிநிதி ஜெயக்குமார் அவர்களும் ஏற்றிவைத்தனர். அடுத்து மாவீரரின் அவுஸ்திரேலியா வாழ் உறவினரால் ஈகைச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத்தலைவரின் மாவீரர் தின உரை ஒலிபரப்பப்பட்டது. மாவீரர் நினைவுப் பாடல் இனிமையாகப் பாடப்பட்டது. திரு.ஜெயக்குமார் தமது தலைமை உரையில் விடுதலைப் போராட்டத்தின் இன்றைய போக்குப்பற்றியும் அதனைத் தொடர வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

கலை நிகழ்ச்சிகளில் முதலாவதாக "விடுதலை வேள்வி" என்ற நாட்டிய நாடகம் இடம் பெற்றது. அடுத்து சிட்னி கலைஞர்கள் வழங்கிய "உயிர்ச் சிலைகள்" என்ற போராட்ட நிகழ்வைச் சித்தரிக்கும் நாடகம் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து இருபது நிமிட இடைவேளை விடப்பட்டது. கலை நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வாக மெல் பேர்ன் கலைபண்பாட்டுக் கழகத்தினர் வழங்கிய "சந்தனக் காடு" என்ற நாடகம் பலத்த கரகோசத்தின் மத்தியில் இடம் பெற்றது. முன்னர் எப் பொழுதைக் காட்டிலும் இவ்வருட மாவீரர் நாள் கொண்டாட்டம் மிகவும் சிறப்பாக அமைந்தமை குறிப்பிடத் தக்கது. நிகழ்ச்சிகள் யாவும் தேசியக்கொடி இறக்கத்துடன் முடிவுற்றது.

www.tamilarangam.net



# புத்தாண்டு உறுதிமொழி

1997ல் அடியெடுத்து வைக்கும் இந்நேரத்தில், அகிலமெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழத் தேச மக்களாகிய நாம், சிறிலங்கா அரசாங்கம் எமது தமிழீழத் தேசம் மீது மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு விலகுவதற்கும் எமது உடன் பிறப்புக்களான தமிழீழமக்கள் மீது நடாத்தும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் எம்மாலான அனைத்து வழிகளிலும், தமிழீழத் தேசமக்களுடனும் தேசத்தலைவர் பிரபாகரனுடனும் இணைந்து செயற்படுவோமென இப்புத்தாண்டு தினத்தில் உறுதி பூணுவோமாக.

இவ் உறுதி மொழி அர்த்தமுள்ளதும் அவசியமானதுமான காலத்தேவையாக உள்ளது. ஏனெனில் எமது தமிழீழத் தேசமக்களின் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவையும் நியாயத்தன்மையும் உலக நாடுகள் பலவற்றால் அக்கறையுடன் நோக்கப்படத் தொடங்கியுள்ளது. இதனால் எரிச்சலுற்ற சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கம் தமிழீழத்தேசத்திற்கான சர்வதேச அக்கறையை சீர்குலைக்கும் வகையில் சர்வதேசரீதியாக பணபலம் ஆட்பலம் பொருந்திய பிரச்சார செயற்திட்டங்களை கட்டவிழ்த்து விட்டுவருகிறது. இதனால் உண்மைக்கு மாறான யதார்த்த தன்மையற்ற செய்திகள் சர்வதேச உலகில் எமது தமிழீழத்தேசம் குறித்து உலாவவிடப்பட்டு வருகிறது. இவற்றின் போலித்தனத்தை தோலுரித்து காட்டி எமது மக்களின் உண்மைநிலையை, உறுதி மிகு வாழ்வை, பாதுகாப்பான அமைதி மீதான அக்கறையை அகிலமெங்கும் அடித்துக்கூற வேண்டிய கடமை புலம் பெயர்ந்த தமிழீழ தேசமக்களாகிய எம்முடையதாக உள்ளது.

உண்மையில் 1948ம் ஆண்டு காலனித்துவம் உருவாகிய ஒற்றையாட்சி முறைமை, தமிழீழத் தேசமக்களின் நிபந்தனையுடனான ஜனநாயகப் பங்களிப்பாகவே ஏற்படுத்தப்பட்டது. பெரும்பாண்மையினரின் கொடுங்கோண்மை, பாராளுமன்ற முறைமையூடாகத் தோற்றுவிக்கப்படலாம் என்ற அச்சமும் இலங்கைத்தீவில் பல்தேசிய சமூகங்கள் உருவாவதற்கான சமூக பண்பாட்டு அரசியல் பொருளாதார முறைமைகள் ஒருபொழுதும் காணப்படாததாலும், பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் சோல்பரி அரசியலமைப்பு ஊடாக 29(2)வது காபந்து விதியினை ஜனநாயகப் பங்களிப்பான நிபந்தனையாக வைத்தே சுதந்திரத்தை வழங்கினர். அதுமட்டுமல்ல இந்த 29(2)வது விதி மீறப்படுமானால் நாட்டின் சுதந்திர தன்னாதிக்க இறைமை தானாகவே இழக்கப்பட்டுவிடும் என்பதினால் அத்தகைய சூழ்நிலையில் பிரித்தானிய அரசிடம் மேன்முறைமீடு செய்வதற்கான உரிமையும் அளிக்கப்பட்டது. இந்த உரிமை தமிழீழமக்களால் பயன்படுத்தப்பட்டு பிரித்தானிய மேன்முறைமீட்டு பிரபுக்கள் சபை, இலங்கை அரசாங்கத்தின் பாராளுமன்றத்தை இயற்றப்பட்ட சட்டவாக்கத்தின் மேல் மேலாண்மை செய்ததினால் ஏற்பட்ட சீற்றத்தினாலேயே சிங்கள பெளத்த பேரினவாதப் பிரதிநிதிகள் தன்னிச்சையான சிறிலங்கா சிங்கள பெளத்த குடியரசு பிரகடனத்தின் மூலம் 1972ல் ஜனநாயக ஆட்சி முறைமையை வன்முறைப்படுத்தி தமிழீழமக்களை நாடற்ற இனமாக்கினர். இதனை ஜனநாயக முறையில் எதிர்த்த தமிழ் மக்களை பொலிசை இராணுவமாக மாற்றி ஆயுத பலாத்காரத்திற்கு உட்படுத்தியும், சிங்கள பெளத்த பேரினவாத காடையர்களின் இனக்கொலை இனஅழிப்பு முயற்சிகளுக்கு சட்டப் பாதுகாப்பு கொடுத்தும், தமிழீழ மக்கள் தமது வாழ்வுக்கு தாமே தேசியபாதுகாப்பை உருவாக்க வேண்டிய தேவையை சிங்கள அரசு ஏற்படுத்தியது.

தமிழர்களின் அரசியல் தலைவராக விளங்கிய தந்தை செல்வநாயகம் தமது பாராளுமன்ற ஆசனத்தை இராஜினாமாச் செய்து 1972 இலேயே மக்கள் கருத்தறிதலுக்கு பாதைவகுத்தார். ஆயினும் 1975ல் இத்தேர்தலை நடத்தாது இழுத்தடித்து பொலிசாரை இராணுவமாகப் பயன்படுத்தி சிறிலங்கா நடாத்திய இனவாத துன்புறுத்தல்களே தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தேசிய விடுதலை இயக்கத்துக்கு வித்தாயிற்று.

பின்னர் 1975ல் தந்தை செல்வநாயகம் அறுதிப்பெரும்பான்மை வாக்குகளால் தமிழ்மக்களின் விருப்பை வெளிப்படுத்தி சிறிலங்கா பாராளுமன்ற ஆட்சி முறைமையை ஏற்கமறுத்து சிறிலங்கா பாராளுமன்றத்தில் வைத்தே "சுயநிர்ணய உரிமை பிரகடனம் செய்தார்".

இந்த சுயநிர்ணய உரிமை பிரகடனம் 1976 வட்டுக்கோட்டை மகாநாட்டின் மூலம் தமிழர் கட்சிக் கொள்கையாக மட்டுமல்லாது தமிழீழத் தனிநாட்டின் முன்மொழிதலாக வெளிப்படுத்தப்பட்டது. இந்த தமிழீழத் தனிநாட்டு பிரகடனம் 1977 பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் குடியொப்பத்திற்கு விடப்பட்டு தமிழ் மக்களால் ஏற்கப்பட்டது.

இதனை அடுத்து 1978 முதல் சிறிலங்கா, தமிழ் மக்கள்மேல் படைபல நெருக்குதல்களை "பயங்கரவாத தடைச்சட்டம்" என்ற போர்வையில் புகுத்தி 1983ல் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தமாக மாற்றியது. இந்த கொடிய இனஅழிப்பு யுத்தத்தில் எதிர்ப்பதற்கான ஆயுதபோராட்டமொன்றை சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் முன்னெடுத்த தமிழ் மக்கள் தமது அளப்பரிய உயிர்த்தியாகங்களாலும், உன்னதமான அர்ப்பணிப்புகளாலும் பல தமிழீழத் தேசப்பகுதிகளை மீட்டது மட்டுமல்லாமல் தமிழீழத் தேசியம், தமிழீழத் தேச இனம், தமிழீழ அரசு நோக்கிய அரசு என்ற இயல்பான வளர்ச்சிகளையும் பெற்று தமது தேசிய விடுதலைப்போராட்டத்தை கடந்த 18 ஆண்டுகாலமாக முன்னெடுத்து வருகின்றனர். இந்த தமிழீழத் தேசத்தின் அரசுநோக்கிய அரசு நிலை உண்மை அரசாக மாறுவதை தடுப்பதற்கான ஒரே ஆயுதமாக சிறிலங்கா தனது படைகளை பயன்படுத்துகின்றது.

மக்கள் மீதான யுத்தம், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், மக்கள் மீதான முற்றுகை, பொருளாதாரத்தடைகள், இனஅழிப்பு போன்ற சர்வதேச சட்டங்களுக்கு எதிரான குற்றச் செயல்களை மட்டுமல்ல உட்கட்டுமானங்களை அழித்தல், மூலவளங்களை அழித்தல், மக்களின் அபிவிருத்தியை அழித்தல் போன்ற சர்வதேசக்குற்றங்களையும் சிறிலங்கா தொடர்ந்து செய்து வருகிறது.

இந்நிலையில் 19வது ஆண்டில் யுத்தத்தை தொடரும் நோக்கில் சிறிலங்கா முழுஅளவிலான இராணுவத்தீர்வு முயற்சிகளில் அக்கறை காட்டுகிறது. ஆயினும் கடந்த 18 ஆண்டு காலயுத்த அனுபவங்கள் சிறிலங்காவால் இந்த யுத்தத்தில் ஒருபொழுதும் வெற்றிபெறமுடியாது என்பதை தெட்டத்தெளிவாக்கியுள்ளது. இதனால் தெற்காசியாவின் சர்வதேச முனைப்புகளுக்கு ஊக்கமளித்தாவது இந்த யுத்தத்தில், தான் வெற்றி பெறவேண்டுமெனும் செயற்பாடுகளில் இறங்கியுள்ள சிறிலங்கா இதன் மூலம் உலக அமைதிக்குப் பாதுகாப்புக்கும் தீக்குச்சிகளை தட்டிவைக்கத்தொடங்கியுள்ளது.

ஆகவே இந்நிலையில் தமிழீழ மக்களின் நியாயமான போராட்டத்தை உடனடியாக சர்வதேச நாடுகள் அங்கீகரித்து 1997ல் தெற்காசிய அமைதியும், இலங்கைத்தீவின் அமைதியும் நிலைக்க உதவ வேண்டுமென்பதே தமிழீழப் புலம் பெயர் மக்களின் புத்தாண்டு அவாவாக உள்ளது. உண்மையான அமைதி பேச்சுவார்த்தைகளுடாக வளர்ச்சி பெறுவதற்கு மக்களுக்காகப் போராடும் அமைப்புக்களுக்கு அங்கீகாரம் முக்கியமானது என்பதை உலகின் பல தேசிய விடுதலை போராட்டங்கள் உலகுக்கு உணர்த்தியுள்ளன. ஆகவே தமிழ் மக்களின் யதார்த்தத்தன்மைகள் ஏற்கப்பட்டு தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை 1997ல் அங்கீகரித்து நிரந்தரஅமைதி தோன்ற சர்வதேச சமூகம் உதவவேண்டும். ✷

# பேரினவாதிகளின் நியாயம்

செவிவழியாக வந்த புராணக்கதைகளின் மூலம் உருவானது மகாவம்சம். இதனையே தமது வரலாற்றின் அடிப்படையாகக் கொண்ட பெளத்த சிங்களப் பேரினவாதிகள், புராணக்கதை ஒன்றை தமது வரலாறாக ஏற்றுக் கொள்வது போல், உலகமும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கின்றனர். இதில் கேள்விக்கே இடமில்லை என்பது அவர்களின் நியாயப்பாடாக உள்ளது. இதே போன்றே உலகம் பூராகவும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக சிங்கள அரசு நடாத்திவரும் போருக்கு உதவவேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடாகும். சிங்கள அரசு மேற்கொள்ளும் இன ஒடுக்கு முறை, இனப்படுகொலை என்பனவற்றை உலகம் கண்டு கொள்ளவோ, அதுகுறித்துக் கேள்வி எழுப்பவோ கூடாது. போருக்கு ஆதரவாக நிதியை வரிவாங்கவேண்டும் என்பதே அதன் நிலைப்பாடாகும். இந்த வகையில் அமைந்ததே பிரிட்டிஷ் ஆளும் கட்சி உறுப்பினரான ரொபர்ட் G.கைகேன் இலங்கைத்தமிழ் மக்களுக்கு ஆதரவான கருத்து ஒன்றை தெரிவித்தமைக்காக லண்டனில் உள்ள சிங்களப் பேரினவாதிகளின் கண்டனத்திற்கு உள்ளாகிய மையாகும்.

இலங்கை விவகாரம் தொடர்பான சரியான விபரம் எதுவும் தெரியாமல் ஒருபக்கச் சார்பான தகவல்களை வைத்து அவர் பேசியிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகப் பிரிட்டிஷ் எம். பி மீது அவர்கள் குறைகூறியுள்ளனர். சிங்களப் பேரினவாதிகளின் தகவல்களின்படி தற்பொழுது சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் இன ஒடுக்குமுறைகளும், மனித உரிமை மீறல்களும் சரியானவையாகும். இவையாவும் பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் அங்கங்களேயாகும். இதில் பாதிக்கப்படுபவர்கள் புலிகளே ஒழிய தமிழ் மக்கள் அல்ல என்பதே அவர்களின் நியாயம் ஆகும். சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்தவரை அவர்களின் நியாயம் சரியானதாக இருக்கலாம். ஏனெனில் அவர்களின் கோட்பாட்டில் தமிழர்கள் யாவரும் ஒழிக்கப்படவேண்டியவர்களே. இதில் புலிகள் யார்? தமிழ் மக்கள் யார்? என்பதெல்லாம் அவர்களை பொறுத்து தேவையற்ற, காலவிரயம் செய்யும் நடவடிக்கையாகும். ஆனால் தமது இந்த நிலைப்பாட்டை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர்கள் எதிர்பார்ப்பதுதான் ஆச்சரியமானதாக உள்ளது. பேரினவாதியான காமினி ஜெயசூரிய அண்மையில், பெளத்த குருமாரின் கூட்டம் ஒன்றில் பேசுகையில் "சமாதான உடன்படிக்கை ஒன்று உண்டென்றால் 1815ம் ஆண்டு பிரிட்டிஷாருக்கும், சிங்கள இனவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை தவிர வேறு எதுவும் இல்லை. இந்த சமாதான உடன்படிக்கை மூலம் பிரிட்டிஷார் இந்த நாட்டை சிங்களவருக்கு கையளித்துவிட்டனர்". எனத் தெரிவித்தார். இதில் இருந்தே பெளத்த சிங்களப்பேரினவாதம் தனக்கு ஆதரவாளரை மட்டும் ஏற்றுக் கொள்ளத் தயாராக உள்ளது என்பதை புரிந்துகொள்ளமுடியும்.

இல்லாதுவிடின் கண்டி ராஜதானி பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டபோது ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டை தனக்குச் சாதகமானதொரு ஆதாரமாகப் பயன்படுத்தி இருக்கமாட்டாது. ஏனெனில் உண்மையில் இந்த உடன்பாடானது தோல்விக்கான சரணாகதி உடன்படிக்கையேயாகும். இந்த உடன்பாட்டில் இலங்கைபூராவும், கண்டிச் சிங்களவருக்கு தத்தம் பண்ணப்பட்டதாகக் கூறிய காமினி ஜயசூரிய போன்றவர்கள் இதற்கான உரிமையை வாங்க பிரிட்டிஷார் யார்? என்பதைச் சிந்திக்கவில்லை.

ஆனால் அன்று பிரிட்டிஷ் அரசாங்கம் கண்டியின் பிரதிநிதிகளுடன் செய்துகொண்ட உடன்பாட்டைப் போற்றும் இந்தச் சிங்களப் பேரினவாதிகள் இன்று பிரிட்டிஷ் எம். பி ஒருவர் தமிழருக்கு ஆதரவாகப் பேசிவிட்டார். என்பதினால் கொதித்துப்போய்விட்டார்கள். அன்று தனித்தனியாக இருந்த நிர்வாக அலகுகளை ஒன்றாக இணைத்து இலங்கையை ஒரே நிர்வாக அலகாக பிரிட்டிஷ் தமது ஆட்சிக்குள் கொண்டுவந்தபோது ஆமோதித்த பேரினவாதிகளால் இன்று அந்த நிர்வாக அலகுகளின் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்ற கருத்துக்களை ஏற்கமுடியவில்லை. அத்தோடு உலகம் இதைக் கண்டுகொள்வதையும் பொறுக்கமுடியவில்லை. ✷

www.tamilarangam.net



## வடக்கு கிழக்கு எமது தாயகம்
# அதில் எம்மக்கள் கௌரவத்துடன் வாழ்வதற்காகவே நாம் போராடுகிறோம்

- தமிழீழத் தேசியத்தலைவர் கூறியதாக மன்னார் ஆயர் தகவல்

''நான் யுத்தத்தை விரும்பவில்லை. எவ்வளவு விரைவில் இந்த யுத்தம் முடிவுக்கு வருகிறதோ அவ்வளவுக்கு நல்லது, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவே போராடுகின்றனர். நாம் எப்பொழுதும் வடக்கு கிழக்கு எமது தாயகம் அதில் எமது மக்கள் தன்மானமுள்ள கௌரவமுள்ள சமுதாயமாக வாழவேண்டும் என்றே விரும்புகிறோம்'' இவ்வாறு தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தம்மிடம் கூறியதாக மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் வண. ராயப்பு யோசப்பு சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்க வவுனியா தலைமையகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறினார். "தமிழ் மக்கள் கௌரவமுள்ள சமுதாயமாக வாழவேண்டும் எனும் நீதியான நியாயமான கோரிக்கைக்காகவே நாம் போராடுகிறோம்." என திட்டவட்டமாக தம்மிடம் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் எடுத்து விளக்கியதாக ஆயர் கூறினார்.

அமைதித் தீர்வுக்கான முன்யோசனைகள் குறித்து கத்தோலிக்க திருச்சபை பலத்த ஏமாற்றமடைந்துள்ளதாக தெரிவித்த மன்னார் ஆயர், இந்த அமைதி தீர்வுக்கான முன்யோசனைகள் என்பது இதுவரை எடுமுன் மொழிதலாக மட்டுமே உள்ளது. அதற்கான வழிமுறைகளை கூறும் செயற்திட்டமாக உருவெடுத்தால் அந்நேரத்தில் மட்டுமே திருச்சபையினால் அதற்கேற்ப கருத்துக்கூற முடியும் என ஆயர் விளக்கினார்.

வவுனியா மாவட்டத்திற்கு "கருணைச் செயற்பாட்டுக்கான திட்டம்" என்ற தலைப்பில் டாக்டர்கள் குழுவொன்று விஜயம் செய்தது. டாக்டர் என். பத்மநாதன், டாக்டர் டி. திருக்குமரன், டாக்டர் எஸ். வில்வியம்ஸ், டாக்டர் அமித்தா ஜயரட்ண, டாக்டர் பி. கிருபாகரன், டாக்டர் எஸ். கந்தரேஸ்வரன், டாக்டர் எம். ஆர். ராமஜெயம், டாக்டர். எம். தவராஜா, டாக்டர். எம். ஜெயசக்தி, டாக்டர் வி. திவாகர், ஆகியோர் அடங்கிய குழுவே வவுனியா மாவட்டத்துக்கு "கருணைச் செயற்பாட்டு திட்டத்திற்கென" விஜயம் செய்தனர். டாக்டர்களுடன் தகவல் தொடர்பு சாதனங்களை சேர்ந்தவர்களும் இவ் விஜயத்தில் பங்கெடுத்தனர். இவர்கள் அடங்கிய பத்திரிகையாளர்கள் மாநாட்டிலேயே மன்னார் ஆயர் உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது "எறிகணை வீச்சுக்களும், கண்ணிவெடி விதைப்புகளும் அப்பாவி பொது மக்களின் உயிர்களை குடிக்கின்றன. நான் கூட எனது 21 வயது மருமகன் ஒருவரை இந்த கண்ணிவெடிக்கு பறிகொடுத்துள்ளேன்.

காட்டுக்கு விறகு பொறுக்கச் செல்லும் அப்பாவி மக்கள் அநியாயமாக உயிரிழக்கின்றனர். அப்பாவி பொதுமக்களே எறிகணை வீச்சுகளினால் இறந்து போகின்றனர். மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் 35 முதல் 45 ரூபாவாக விற்கப்படுகிறது. இதனால் மக்கள் மண்ணெண்ணெய் விலைஉயர்ந்த பொருட்களில் ஒன்றாகவே கருதுகின்றனர்.

மேலும் 10 ஆயிரத்திற்கு அதிகமான சிறுவர்கள் அகதிகளாக மன்னார் பிரதேச அகதிமுகாம்களில் உள்ளனர் எனக் கூறிய ஆயர் கண்கலங்கி அழுதார்.

இந்த கருணைச் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் டாக்டர்களினால் வழங்கப்பட்ட மருந்துகள் கூட, மேலதிக கட்டளைகள் வரும்வரை வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ✷

# தமிழீழ விடுதலைப் புலிகள் 96ல் தமது ...

செய்திகளின் நம்பகத்தன்மை உலகுக்கு தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

மேலும் தெற்காசியாவில் அதிக அளவு பணத்தை இராணுவச் செலவுகளுக்கு விரயமாக்கும் நாடாகவும் சிறிலங்கா காணப்படுகின்றது. 94ம் ஆண்டில் 516 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் 95ல் 624 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் 96ல் 701 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் சிறிலங்கா, யுத்தச் செலவீனங்களுக்குச் செலவிட்டுள்ளதாகக் கூறும் அச் சர்வதேச சஞ்சிகை 96ல் ஆடிமாதத்தில் சிறிலங்கா வெளியிட்ட தகவல்களின்படி, முதல் காலாண்டு பகுதியில் அது திட்டமிட்டதைவிட 183 மில்லியன் அமெரிக்க டொலர்களை அதிகமாக யுத்தத்திற்கு செலவிட்டுள்ளதாகவும் தெவிவித்துள்ளது.

இந்த புள்ளிவிபரங்கள் சிறிலங்கா யுத்தத்தை தொடர்ந்து கொண்டு நடாத்தமுடியாத அளவுக்கு அதன் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடைந்து கொண்டுசெல்வதை தெளிவுபடுத்துகிறது.

யாழ்ப்பாணத்தில் கொடியேற்றியதன் மூலம் ரத்வத்தை யாழ்பாணத்தைக் கைப்பற்றி விட்டது போல் திறமையான நடிப்பொன்றை வெளிப்படுத்தியதை அனைவரும் அறிவர்.

தற்போது சிறிலங்காவின் நீதி அரசியல் அமைப்பு அமைச்சரும் உதவி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் யாழ்நகரில் சிறிலங்காவுக்கு இறைமை இல்லை என்பதை சிறிலங்காவின் அமைச்சரவை உபகுழு கூட்டத்திலேயே பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். கிரிசாந்தி கொலை வழக்கை கொழும்புக்கு மாற்றியமை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர் யாழ் நகரில் வழக்கொன்றை நடாத்தும் அளவிற்குக் கூட பாதுகாப்புக் கொடுக்க சிறிலங்கா அரசாங்கத்தால் முடியாது உள்ளது என்ற உண்மையை உலகிற்கு பகிரங்கப்படுத்தியுள்ளார்.

அத்துடன் ஒரு அரசாங்கத்தால் நாட்டின் ஒரு பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்த இயலாவிடின் அவ்அரசாங்கம் ஆற்றல் அற்றதாகின்றது. இந்நிலையில் அப்பகுதி மக்கள் நேரடியாக தமது உன்னத சுயநிர்ணய உரிமையை பிரயோகித்து தமது அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிப்பதை சர்வதேச சட்டங்கள் ஏற்றுக் கொள்கின்றன.

அவ்வாறே இத்தகைய நிலையிலுள்ள மக்கள் தமது வெளியக சுயநிர்ணய உரிமையை பிரயோகித்து சர்வதேச சமூகத்திடம் தமக்குத் தேவையான உதவிகளை நேரடியாகப் பெறவும் சர்வதேச நாடுகள் நாட்டின் இறைமையை மீறி இத்தகைய உதவிகளைவழங்கவும் சர்வதேச சட்டங்கள் ஒப்புமை அளிக்கின்றன.

இதற்கிடையில் சிறிலங்கா படைகளிலிருந்து தப்பியோடி பதுங்கி ஒளிந்து வாழும் படையினர் சிறிலங்காவினால் இறைமையுடன் தமிழீழ பிரதேசத்தை ஆட்சி செய்ய ஒருபொழுதும் முடியாது என்பதற்குச் சான்றுகளாகக் கருதப்படுகின்றனர். 28,739 சிறிலங்கா இராணுவத்தினர் மீண்டும் படையில் இணைந்து விடுதலைப் புலிகளுடனான போர்க்களத்திற்கு செல்ல அஞ்சி ஒளிந்து வாழ்ந்து வருகின்றனர் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் காலிமாவட்டத்தில் மட்டும் 3337 பேர் ஒளிந்து வாழ்வதாகச் சந்தேகிக்கப்படுகிறது. சிறிலங்கா, பொதுமன்னிப்பு வழங்க முற்பட்டும் இவர்கள் வெளிவர மறுத்து விட்ட நிலையில் கிராம சேவையாளர்களின் உதவியுடன் இவர்களை தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சிகளில் சிறிலங்கா இறங்கியுள்ளது.

சிறிலங்கா பொருளாதாரமும் இராணுவ ஆட்சேர்ப்பு முயற்சிகளும் தோல்விகளைத் தழுவும் ஒருகால கட்டத்தில் 1997ல் சிறிலங்கா விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை தொடர்வதற்கு புதிய உத்திகளை தேடிவருவதாக தெரிகிறது. ✷

## திருகோணமலையை சிங்களதேச ...

சிங்கள மீனவர்களுக்கு மட்டுமே வழங்கி வருவதனால் சிங்கள மீனவர்கள் திருகோணமலைப் பகுதியில் குடியேறுவது அதிகரித்து வருகின்றது.

தமிழ் மீனவர்கள் யாராவது தொழில் செய்யவென கடலில் இறங்கினால் அவர்கள் ஈவிரக்கமின்றி சுட்டுக்கொல்லப்பட்டுவிடுகின்றனர்

. கடந்தவாரம் பாலகிருஸ்ணன் எனும் 65வயதுப் பெரியவர் ஒருவர் மீன்பிடிக்கச் சென்றபொழுது சிறிலங்காப் படையினரால் சுட்டு இனக்கொலை செய்யப்பட்டார். ✷

## சிங்கள மீனவர்கள் விடுதலை..

அவ்விடத்திற்கு விரைந்து மனிதாபிமான அடிப்படையில் உயிராபத்து உதவிகள் புரிந்து கரைசேர்த்தனர். பின்னர் கடற்புலிகள் இவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னி நிர்வாகிகளின் கையில் ஒப்படைத்தார்கள். மேற்படி மீனவர்கள் பராமரிக்கப்பட்டு தற்பொழுது தமிழீழத் தேசியத்தலைவரின் அனுமதியுடன் வீடு செல்லுமாறு செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தினை கேள்விப்பட்ட தமிழீழ பொதுமகன் ஒருவர் தேசியத்தலைவர் பிராபாகரன் குறித்து மாவீரர் வானதி முன்னர் எழுதிய பின்வரும் கவிதை வரிகளை நினைவு கூருகிறார்.

"இவன் கைகள் மட்டுமே
ஆயுதம் ஏந்தும்
இவன் கண்களோ கருணை
வெள்ளத்துள் நீந்தும்"

# மூதாதையரின் எலும்பு ....

ரணம் வழிந்தோடி வலியெடுத்தது. ஆனாலும் "தந்தையைக் காணும் ஆவல் மிக்க உறுதியோடு அவனது நடை முன்னேறியது. அவன் மனக் குரலின் ஒவ்வொரு ஒலித்துளியும் "அப்பா..... அப்பா....." என்று முணுமுணுத்தது.

பார்டானை அடைந்ததும், மரங்களில் சரிந்து, சுவர்களைத் தாண்டி, வேலிகளை மீறி அவன் ஓடினான். தந்தை வசித்த தோட்டத்தில் ஆவல் வெறி ததும்பும் கண்களால் அவரைத் தேடினான். வானமும், சுற்றியிருந்த மரங்களும் கதி கலங்கி அதிருமளவுக்கு "அப்பா.... அப்பா...." எனக் கூக்குரலிட்டான். பதிலாக அவன் குரலின் எதிரொலிப்பே எழுந்தது.

தாழ்ந்து படர்ந்திருக்கும் மரக்கிளைகளுக்கிடையில் எச்சரிக்கையுடன் தலையை முன் தள்ளிப் பாய்ந்து சென்று தேடினான். கிளைகளடர்ந்த ஒரு ஒலிவ் மரத்தருகே வந்த போது அவன் அதிர்ந்து போனான்.

அந்த மரத்தின் நிழலில் கிழவர் மர்சித் அலயான் கிடந்தார். அவரருகில் துப்பாக்கி கிடந்தது. உடைந்த வெடிமருந்துப் பெட்டிகளின் சிதிலங்கள் அவரைச் சுற்றிலுமிருந்தன.

முகமத் அவரது உடலை மெல்ல நகர்த்தினான். மண்ணுக்குள்ளிருந்து வெளியெழுப்பதைப் போன்ற உணர்வைத் தரும் படிக்கு உடல் கனத்துப் போயிருந்தது. தாடி மயிர் மண்ணோடு இணைந்து வேர் விட்டிருந்ததைப் போல தோற்றமளித்தது. உறைந்த குருதியின் தடங்கள் அவர் கன்னங்களிலும், நெற்றியிலும், தாடியோரங்களிலும், மண்ணிலும் கருஞ்சிவப்பாய் கிளை பிரிந்து கோரக் காட்சி தந்தது. விழித்திருந்த அவரது வலக் கண்ணில் ரத்தம் நிரம்பி உறைந்திருந்தது.

துப்பாக்கி ரவை பாய்ந்து சென்ற துளையை அவர் நெற்றியில் கண்டதும் முகமத் துக்கத்தால் நொய்ந்து போனான். அவரது சவக் கன்னங்களில் முத்தம் பதித்து கதறி அழ ஆரம்பித்தான். பிரபஞ்சத்தின் அனைத்து நெஞ்சையும் பிசையும் வண்ணம் கனத்த நிசப்தச் சூழலில் அவனின் அழுகுரல் எழுந்தொலித்தது.

அழுகை நின்றபோது அவன் கண்கள் புதியதொரு உறுதி பூண்டு ஜொலித்தன. தனது மேலங்கியால் தந்தையின் உடலைப் போர்த்தி முதுகில் சுமந்து சென்றான். சுமை தாளாமல் அவன் கால்கள் வழிமுழுதும் மண்ணில் இழுபட்டுச் சென்றன. சுடுகாட்டின் வாசலருகே வந்ததும் உடலைக் கீழே கிடத்தினான். அகன்று கிடந்த இடுகாட்டின் வாயை மூடியிருந்த பெரும் பாறையை நகர்த்திய பின் மறுபடியும் தன் முதிய தந்தையைச் சுமந்து சென்றான். அவரை அவரது மூதாதையரின் எலும்புகள் நிறைந்த அந்த இடுகாட்டின் தணியாப் பசி கொண்ட பெருத்த வயிற்றில் திணித்தான். வெளிவந்து பழையபடியே பாறையால் இடுகாட்டின் வாயை அடைத்துவிட்டு, கைகளை அகல விரித்து பாராயணம் செய்திருந்த புனிதக்குரானின் முதல் அத்தியாயத்தை உரத்து ஓதினான்.

பிறகு தோட்டத்திற்குச் சென்றான், அங்கே ஒலிவ் மரத்தடியில் ஒரு வீரனின் கைவசப்படுவதற்காய் தவமிருந்த துப்பாக்கியை, இறக்கும் வேளையில் கிழவர் மார்சித் ஏந்தியிருந்த அந்தத் துப்பாக்கியை நோக்கி முகமத் தலை பணிந்தான்.

துப்பாக்கியைக் கைக்கொண்டான். எழுந்து மரங்களடர்ந்த பாதை வழியே மாலைச் சூரியனைப் போல் விரைவாய் சென்று மறைந்தான். ✷

www.tamilarangam.net



## உண்மைக் கதை

இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் - உணர்வு பூர்வமாக - நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக - நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மாளைக் கும்பிடுறானுகள்.....!" என்ற பெயரிலும், இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சிங்கள வெறிப் படை -

'அமைதிப் படை' - ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் - போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் - போராளிகளை நேசித்து, அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள் .......

எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன. அவற்றில்....... ஓர் நிகழ்வு.

# இது ஒரு தொடர்கதை

யாழ். மாவட்டத்தில் சிறுப்பிட்டி என்னும் கிராமம். யாழ். குடாநாட்டின் மிகப்பெரிய இராணுவ முகாமான பலாலி முகாமுக்கு அண்மையில் உள்ளது. சிறிலங்கா இராணுவத்தினரின் வெளியேற்றம் போராளிகளின் இரத்தத்தால் கட்டுப்படுத்தப்பட்டு, முகாங்களெல்லாம் இராணுவத்தினருக்கு சிறைக்கூடமாக மாறி இருந்தன. முகாமிலிருந்து ஏவப்படும் 'ஷெல்' மட்டுமே இக்கிராமத்துடன் தொடர்புடையதாக இருந்தது.

சண்டையின்போது இராணுவக் காலடிகள் படாத இக்கிராமத்தில், சமாதானம் என்ற பெயரால் வந்தவர்களின் வாகனங்களும், பட்டாளங்களும் பரவத்தொடங்கிய காலம். அன்றொருநாள் அதிகாலை, ஒலிபெருக்கி அங்குள்ளவர்களைத் துயில் எழுப்பியது. விடுதலைப் பாடல்களையும் வீரமரணம் எய்திய போராளிகளின் அஞ்சலியாம் சோககீதத்தையும் இசைக்கும் ஒலிபெருக்கியாக அது இருக்கவில்லை. அபாய அறிவிப்பு அது. அண்மையில் உள்ள சிறிசோமாஸ்கந்த கல்லூரியில் ஆண்கள் அனைவரும் வந்து சேரவேண்டுமென்ற கடுமையான உத்தரவைப் பிறப்பித்தது – எல்லைச் சண்டைகளில் நடமாடும் யுத்த டாங்கிகள் சிறுப்பிட்டியின் கொல்லைகளில் காணப்பட்டன.

இந்த யுத்த டாங்கிகள் தமது சங்கிலிகளின் கோரப்பற்களினால் கொக்குவில், யாழ் நகரம் போன்ற இடங்களில் எமது மக்களின் உடல்களை துவசம் செய்து இப்போது தமது கைவரிசையைக் காட்டத் தமது கிராமத்திற்கே வந்துவிட்டன என்பதை நினைக்க, அக்கிராமத்தவர்களுக்குக் கலக்கம் உண்டாயிற்று. உயிரைப் பற்றி அச்சப்படாத கன்னியர், தம் கற்பைப்பற்றிக் கவலைப்பட்டனர். 'நேசக்கரங்கள்' என நினைத்தவை 'மோசக்கரங்களாகி' கதறக் கதற எமது சகோதரிகளைக் கசக்கிப் பிழிந்ததை அறிந்திருந்தமையால், ஒவ்வொரு வினாடியும் அவர்கள் அச்சம் அதிகரித்துக்கொண்டே இருந்தது. தமது சகோதரிகளை, மனைவியை விட்டுச் செல்லமுடியாத ஆண்கள், "இனி சாவென்ன முழுமென்ன" நடப்பது நடக்கட்டும் என்று வீட்டிலேயே தங்கினர். வேலிகளுக்குள்ளால் நிலைமை பற்றிய தகவல்கள் பரிமாறப்பட்டன.

மீண்டும் ஒரு அறிவிப்பு! "பாடசாலைக்கு வராத ஆண்களெல்லாம் விடுதலைப்புலிகளாகக் கணிக்கப்படுவர்."

அதைத்தொடர்ந்து வேட்டுக்கள். வேட்டொலி கேட்ட பெண்களெல்லாம் அழுது குழறி எல்லா ஆண்களையும் பாடசாலைக்கு அனுப்பினர். உள்ளத்தை வீட்டில் இருத்தி, உடல்கள் நகர்ந்தன.

பெண்கள் யாவரும் கலங்கி நிற்கின்றனர். முற்றிப்பழுத்தவர் ஒருவர் தனது மூன்றாவது காலின் உதவியுடன் (ஊன்றுகோல்) தள்ளாடித் தள்ளாடி முற்றத்தை நோக்கி வருகின்றார். ஒரு கையில் மீன்வெட்டும் பெரிய கத்தி. கலங்கி நிற்கும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், அயலவர்களை அழைக்கின்றார்.

"நீங்கள் பயப்பிடாமல் நில்லுங்கோடி. வீட்டுக்குள் அவர்கள் எதையாவது தேடட்டும். இந்தக் கள்ளப்படை கொண்டுபோறதைக் கொண்டு போகட்டும். வேறு ஏதாவது சோதிக்க வந்தால் இந்தக் கத்திக்குப் பதில் சொல்லட்டும்."

இந்தக் கிழவனாரின் வார்த்தைகளைக் கேட்ட பெண்கள் சிறு நம்பிக்கை பெற்றவர்களாக அவரின் அருகே வந்து நிற்கின்றனர். இதேவேளை அடுத்த வீட்டில் ஒரு பாட்டியும் பேத்தியும். கிழவரோடு சேர்ந்து சில பெண்கள் நிற்பதைக் கண்ட பேத்தி, அவருடன் போய் நிற்போம் எனப் பாட்டியை அழைக்கிறாள். கூட்டமாக நிற்பது பாதுகாப்பாக இருக்குமென அவள் கருதினாள். "நீ போய் அங்கே நில்லம்மா. நான் கிழவிதானே? என்னை என்ன செய்துவிட முடியும்" என்று கேட்டாள், அந்த 70 வயதுப் பாட்டி.

இதேவேளை பத்து, பதினைந்து பேர் கொண்ட குழுக்களாக வீடு வீடாகத் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றனர் பாரதப் படையினர். கிழவனாரும், பெண்களும் நிற்கும் இடத்தையும் நெருங்குகின்றனர். நடக்கவிருக்கும் விபரீதங்களை எண்ணி பெண்கள் குழு ஓலமிட ஆரம்பிக்கின்றது. கிழவர் அவர்களை அடக்கி அமைதியாக்குகிறார்.

"பாம் வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டபடியே பெண்கள் மீது தமது அங்க சேஷ்டைகளை ஆரம்பிக்கின்றனர் இந்திய இராணுவத்தினர்!. கிழவனாரின் கடுமையான வார்த்தைகளை எருமை மாட்டில் மழை பெய்வது போல எடுத்துக் கொள்கின்றனர்.

பெண்களை வீட்டுக்குள் வரும்படி இராணுவத்தினர் உத்தரவிடுகின்றனர். "வீட்டைச் சோதனையிடுவதானால் சோதனையிடுங்கள். எதை வேண்டுமானாலும் எடுத்துச் செல்லுங்கள். எங்களை மட்டும் ஒன்றும் செய்துவிடாதீர்கள்" என அழுது புலம்பினர். இதற்கெல்லாம் மசியக்கூடியவர்களா அவர்கள்? அவர்கள்தான் 'உலகின் நான்காவது பெரிய' இராணுவமாயிற்றே! பெண்களை தலைமுடியில் பற்றி வீட்டுக்குள் இழுக்கின்றனர். பொறுமையின் எல்லையையே கடந்தாயிற்று. கிழவனார் அவர்களை திட்டியபடியே நடுநடுங்கியபடி கத்தியை ஓங்கினார். ஆனால் எதிர்நின்ற சிப்பாயின் கால் வலிமைக்குத் தாக்குப்பிடிக்காமல் சுருண்டு விழுகிறார். பெண்களின் அலறல் வானைப் பிளக்கிறது. சத்தம் கேட்ட உயர் அதிகாரி அங்கே விரைகிறார்.

"என்ன நடந்தது. ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்?" பாதிக்கப்பட்டவர் மீதே பாய்ந்து விழுந்தார், பாரத இராணுவ உயர் அதிகாரி.

நீதிபதி ஸ்தானத்தில் ஒருவர் கிடைத்துவிட்டார் என்ற நம்பிக்கை ஒளியில் நடந்ததை விபரிக்கின்றனர் பெண்கள். இராணுவத்தினரை நோக்குகின்றார் அதிகாரி.

"நாங்கள் கோழி பிடிக்க முயன்றோம். கோழிக்கு எறியும்போது இவர்கள் மீது பட்டுவிடுமே என்று உள்ளே போகச் சொன்னோம்" என்று சிரித்தபடியே மழுப்புகின்றனர் சிப்பாய்கள்.

நடந்தவற்றையும் நடக்க இருப்பதையும் புரிந்துகொண்ட அதிகாரி ஒன்றும் புரியாததுபோல் பாவனைசெய்தார். "போகச் சொன்னால் போவதுதானே!" என்று பெண்கள் மீது பாய்ந்து விழுந்துவிட்டு அங்கிருந்து நகருகிறார். அவரும் சிப்பாய் என்ற நிலையில் இருந்து இப்படியான செயல்கள் மூலம் பதவி உயர்வு பெற்றவர்போலும்! ஏன் நான் இடைஞ்சலாக இருப்பான் என்று எண்ணித் தான் அங்கிருந்து சென்றிருப்பார்.

இராணுவத்தின் 'தேடுதல்' கள் முடிவடைந்ததும் பாட்டி நோக்கி விரைகிறாள் பேத்தி. வீட்டில் தனிய இருந்த பாட்டி அலங்கோலமான நிலையில் மயங்கிக் கிடக்கிறாள். 'பெருமை மிக்கதாம்' பாரதப் படையின் தேவைக்கு பாட்டி கூடத் தப்பவில்லை. புரிகிறது பேத்திக்கு.

பாட்டியின் முகத்திற்கு தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவிக்கின்றனர். மெதுவாகத்தூக்கி உட்கார வைக்கின்றனர். ஆதரவாக விசாரிக்கின்றனர். தன்னிடம் கேட்ட கேள்விகளுக்கு தான் பதில் சொல்லச் சொல்ல சொக்கில் கிள்ளியும் மற்றும் பல சேட்டைகளையும் அவர்கள் புரியவே தான் மயங்கிவிட்டதாகவும், பின் என்ன நடந்தது என்று தெரியாது என்றும் பாட்டி சொல்கிறாள்.

இதேவேளை பாடசாலைக்குச் சென்ற ஆண்கள் திரும்பி வருகின்றனர். தங்கள் கணவன்மார்கள், தங்கள் பிள்ளைகள் திரும்பி வருகிறார்களா என ஏக்கத்துடன் ஒவ்வொரு பெண்ணும் நோக்குகின்றாள். எதிர்பார்ப்பவர்களைக் காணாதவர்கள் தேம்புகின்றனர். சிலர் எட்டப்பர்களாலும் பாரதப்படையாலும் தாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். வேறு சிலர் மின் அதிர்ச்சிக்கு ஆளாகிக்கொண்டிருக்கின்றனர். சிலர் கைப்பெருவிரலில் கட்டித்தொங்கவிடப்பட்டு

> "பாரதப் படை இன்னும் எத்தனை நாளைக்கோ" எல்லோர் வாயும் இதையே முணுமுணுக்கின்றது. ஏனெனில் இது ஒரு தொடர்கதைதான் என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

தாக்கப்பட்டதாகவும், ஒரு சிலரே முகமூடி அணிந்த அந்த மர்ம மனிதர்களின் 'கடாட்சத்தினால்' அசம்பாவிதம் இன்றி வெளியே வந்ததாகவும் கூறுகின்றனர். அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க பெண்கள் தயாராகின்றனர்.



"பாரதப் படை இன்னும் எத்தனை நாளைக்கோ" எல்லோர் வாயும் இதையே முணுமுணுக்கின்றது. ஏனெனில் இது ஒரு தொடர்கதைதான் என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். தூரத்தில் எங்கிருந்தோ பாரதப்படையின் பெருமைகள் பற்றி, முன்னாள் 'முற்போக்காளர் ஜெயகாந்தனின்' குரல் ஒலிக்கிறது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐ.நாடுகள் சபை தமிழீழ விடுதலைப் புலிகளைத் தேசிய விடுதலை இயக்கம் என அங்கீகரித்துள்ளது

## -பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்க விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illimois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

சாட்சி: உங்களுக்குத் தெரியும் இதுவொரு வரலாற்று ரீதியான தாயகம் அல்லவென்று இவர்களில் பலர் கியூபா அமெரிக்கர்கள், மியாமியில் இன்று இருப்பவர்கள் பெரும்பாலோர் கியூபா நாட்டவர், ஆனால் அதன் காரணமாக இவர்கள் தாங்கள் சுயநிர்ணய உரிமைக்கு உருத்துடைய மக்கள் என்று பிரகடனம் செய்ய முடியாது. அதேபோல் Florida ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பிரிந்து போக வேண்டும் என்றும், அதனை மற்றவர்கள் அங்கீகரிக்க வேண்டும் என்றும் கேட்க முடியாது. அவர்களது வரலாற்றுத் தாயகம் கியூபாவாகும். இந்த அமைப்புக்கள் பற்றி ஒன்றை மட்டும் நீங்கள் கவனிக்க வேண்டும். இந்தத் தேசிய விடுதலை இயக்கங்கள், Symbionese Liberation Movement தொடங்கி Baader-Meinhof Group ஈறாக நான் நம்பவில்லை. Baader-Meinhof Group தேசிய விடுதலை இயக்கமாகக் கருதுவதற்கு தகுதி இருக்கிறதென்று.

தேசிய விடுதலை இயக்கங்களுக்கு தனித்துவமான வரலாறுகள் உண்டு. இவற்றையிட்டு பொதுப்படையான முடிவுக்கு வருவது கடினமானது. இவற்றின் வரலாற்றை நீங்கள் படிக்க வேண்டும். ஒரு நிபுணன் என்ற முறையில் நான் என்ன செய்கிறேன் என்றால் இத்தகைய மோதல்கள் பற்றிய வரலாற்றை நான் படிக்கிறேன். சில சந்தர்ப்பங்களில் இத்தகைய படிப்பு நீண்ட காலத்துக்குப் பின் நோக்கிப் போகக்கூடும்.

நான் நினைக்கிறேன்.... பேராசிரியர் Quigley சொன்னவாறு ஒவ்வொன்றும் சந்தர்ப்பங்களைப் பொறுத்து இருக்கிறது. ஒரு மக்களோடு இன்னொரு மக்களை ஒப்பிட்டு பொதுவான முடிவுக்கு வருவது கடினமானது.

இருந்தும், இப்படியான போராட்டங்கள் ஐ.நாடுகளின் பொதுச்சபையின் கவனத்துக்கு வருகிறது. உதாரணமாக ஐ.நாடுகளின் பொதுச்சபை சில போராட்டங்கள் பற்றி ஒரு நிலைப் பாட்டை எடுத்துள்ளது. அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒரு நிலைப்பாட்டை எடுக்கலாம். தமிழர்களது போராட்டத்தைப் பொறுத்தளவில் செஞ்சிலுவைச்சங்கம் அதில் ஈடுபட்டுள்ளதை நீங்கள் கவனிக்க வேண்டும். செஞ்சிலுவைச்சங்கம் மனிதாபிமான நிலைமையைக் கண்காணிக்கிறது.

எனவே செஞ்சிலுவைச்சங்கத்தின் தலையீடு முக்கியமான அம்சமாகும். அதுமட்டும் முக்கியமானதல்ல,

வெளி அமைப்புக்கள் இந்தப் போராட்டங்கள் பற்றி முடிவெடுப்பதில்லை என்று சொல்ல முடியாது. ஐ.நாடுகளின் மனித உரிமை ஆணையம் தமிழர்கள், சிங்கள அரசுக்கிடையிலான போராட்டத்தில் மனிதாபிமானச்சட்டம் பிரயோகிக்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

மனிதாபிமான சட்டம், மனிதவுரிமைச் சட்டத்தில் இருந்து பெரிதும் வேறுபட்டது. மனிதாபிமானச் சட்டம் ஜெனிவா மரபுகள், ஒப்பந்தங்கள் உருவாக்கிய சட்டம். எனவே இங்கு ஒரு வெளியான, சுதந்திரமான ஐ.நாடுகள் சபை மனிதாபிமானச் சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

எனவே எந்தவொரு குழுவும் தாங்கள் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்று கோர முடியாது. நான் முன்பு சொன்னவாறு நீங்கள் ஜெனிவா ஒப்பந்தம் 1, பந்தி 4, விதி 1உருவாகிய வரலாற்றைப் பார்க்க வேண்டும். இதுவொரு கடுமையான பரீட்சையாகும். எனது எண்ணப்படி ஜெனிவா ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யும் இயக்கங்கள் பலவாக இருக்க முடியாது.

நீதிபதி: ஐயா, நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா? உங்கள் அபிப்பிராயப்படி இந்த அளவு கோல் எவையெவை என்று கூற முடியுமா?

சாட்சி: கௌரவ நீதிபதி அவர்களே, விதி 1, பந்தி 4 இன் பிரகாரம் மக்களை, கணிக்கப்பட்ட மக்களை, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு தேசிய விடுதலை இயக்கமாக கணிக்கப்படுகிறது.

நீதிபதி: உரித்துடைய மக்கள் குழு?

சாட்சி: கனம் நீதிபதி அவர்களே, உரித்துடைய மக்கள் குழுவல்ல.

நீதிபதி: நான் நீங்கள் சொல்லிய வார்த்தைகளைப் பாவிக்கிறேன். ஒரு கணிக்கப்பட்ட மக்கள் குழு.

சாட்சி: மன்னிக்கவும், ஆம், நுட்பமான சொல் மக்களாகும்.

நீதிபதி: மக்கள் மட்டும் சரி.

சாட்சி: மக்கள் மட்டும், அது தனிப்பட்ட நபர்களை உள்ளடக்காது. அல்லது சிறுபான்மையினரைக் குறிக்காது. அது மக்களை மட்டும் குறிக்கும்.

நீதிபதி: உரித்துடைய?

சாட்சி: சுயநிர்ணய உரிமையை உபயோகிக்க, பேராசிரியர் Quigley குறிக்கப்பட்டது போல, லித்தூனியர், கிழக்குத் திமோரியர் (East Timorese) மேற்கு சகாரா மக்கள் தகுதியுள்ளவர்கள். நான் சுயநிர்ணய உரிமை சம்பந்தமான பேராசிரியர் Quigley அவர்களது கருத்தோடு ஒத்துப்போகிறேன். அவர்கள் (மக்கள்) கொலனித்துவ மேலாதிக்கத்திற்கும், அந்நிய ஆக்கிரமிப்பிற்கும் எதிராகப் போராட வேண்டும்!..

நீதிபதி: ஒரு நிமிடம்.

சாட்சி: மன்னிக்கவும்.

நீதிபதி: மேலாதிக்கம், மற்றவை?

சாட்சி: அந்நிய ஆக்கிரமிப்பு மற்றும் இனவாத அரசிற்கு எதிராக. எனவே இவற்றைக் கூட்டிப்பார்த்தால் அநேக குழுக்கள் விடுதலை இயக்கத்துக்குரிய வரைவிலக்கணத்தை அளவுகோலைப் பூர்த்தி செய்ய மாட்டாது.

நீதிபதி: அப்படியென்றால் இவை முழுதும் தேவை?

சாட்சி: ஆம், நான் நம்புகிறேன் இவை எல்லாவற்றையும் நிரூபிக்க வேண்டும்.

நீதிபதி: மெத்தச்சரி ஐயா, நன்றி.

சாட்சி: ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட உதாரணங்கள் இருக்கின்றன.

உதாரணமாக நமீபியாவின் (முன்னைய தென்மேற்கு ஆபிரிக்கா) தென்மேற்கு ஆபிரிக்காவின் மக்கள் முன்னணி (SWAPO) அல்லது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) இவற்றைக் குறிப்பிடலாம். இன்று ஏ.என்.சி தென்னாபிரிக்காவையும், சுவப்போ தென்மேற்கு நமீபியாவையும் ஆளுகின்றன.

இந்த அமைப்புக்களின் குணாம்சங்களில் ஒன்று என்னவென்றால், தேசிய விடுதலை இயக்கங்கள் யதார்த்தமான அரசுகளாகக் கணிக்கப்பட்டு சர்வதேச அமைப்புக்களாலும், நிறுவனங்களாலும் கணிக்கப்படுகின்றன.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தளவில், விடுதலைப் புலிகளுக்கும், ஐ.நா. மனிதவுரிமை அகதிகள் உயர் ஆணையத்துக்கும் இடையில் சம்பிரதாய பூர்வமாக எழுதப்பட்ட ஒப்பந்தம் இருக்கிறது.

நான் உங்களுக்கு நிச்சயமாக சொல்லுகிறேன். ஐ.நா.அகதிகள் உயர் ஆணையம் பயங்கரவாதிகளோடு எழுத்து மூலமான சம்பிரதாய ஒப்பந்தங்களைச் செய்வதில்லை.

நீதிபதி: சர்வதேச மட்டத்தில் பயங்கரவாதிகள் இல்லை என்று எனக்கு நீர் சொல்லியிருக்கிறீர். அப்படியென்றால் ஐ.நா. பயங்கரவாதிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதில்லை என்று நீர் கூறும் போது, எதையிட்டுக் கதைக்கிறீர்?

சாட்சி: நான் மேன்மை தங்கிய நீதிபதி அவர்களுக்குக் கூறியவாறு, பயங்கரவாதத்திற்குச் சர்வதேச ரீதியாக ஒரு வரைவிலக்கணம் இருக்கிறதெனத் தனிப்பட்ட முறையில் நான் நம்பவில்லை.

நீதிபதி: இல்லை, உங்களோடு நான் அதையிட்டு முரண்படவில்லை. ஆனால் நீங்கள் சற்று முன் சொன்னீர்கள் ஐ.நா. பயங்கரவாதிகளோடு ஒப்பந்தம் செய்து கொள்வதில்லை என்று, ஆனால் பயங்கரவாதிகள் இல்லை என்றும் சொன்னீர்கள்.

சாட்சி: நாம் நம்புகிறேன், மறைமுகவாகவேனும் ஐ.நா. தமிழீழ விடுதலைப் புலிகளைத் தேசிய விடுதலை இயக்கம் என்று அங்கீகரித்துள்ளது.

நீதிபதி: இதையிட்டு நான் உங்களோடு முரண்படவில்லை. அது என்னுடைய விசாரம் அல்ல. என்னுடைய விசாரம், எனக்கொரு பிரச்சனை இருக்கிறது. அது உம்முடைய வாக்குமூலம் பற்றி மட்டுமல்ல. நீர், "சர்வதேச சட்டம் பயங்கரவாதிகளை அங்கீகரிக்கவில்லை" என்று சொல்வதையிட்டும் முறைமையான....

சாட்சி: முறைமையான அங்கீகாரம் இல்லை.

நீதிபதி: சரி, அப்படியென்றால் அதனை இன்னொரு படி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பயங்கரவாதம் பற்றி முறைமையான வரைவிலக்கணம் இல்லை. அப்படியென்றால் பயங்கரவாதிகள் பற்றி முறைப்படியற்ற அங்கீகாரம் இருக்கிறதா....

சாட்சி: நான் சொன்னவாறு....

நீதிபதி: ஐ.நா.வினால், ஏனென்றால் நீர் சொல்லியிருக்கிறீர் அவர்கள் பயங்கரவாதிகளுடன் ஒப்பந்தம் எழுதமாட்டார்கள் என்று, நிச்சயமாக தமிழர்களுடன் சம்மதித்திருக்க மாட்டார்கள். அவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கும் பட்சத்தில், அப்படியான ஒப்பந்தத்தை செய்திருக்க மாட்டார்கள்.

சாட்சி: அவர்கள் (ஐ.நா) விடுதலைப் புலிகள் வெறுமனே குற்றவாளிகள் என்று முடிவு செய்திருந்தால் Symbionese Liberation அல்லது Army, Boader - Meinhof மாதிரி குற்றங்கள் இழைத்திருந்தால், இப்படியானவொரு ஒப்பந்தத்தை எழுதியிருப்பார்களா என்பதையிட்டு நான் நிட்சயமாக சந்தேகப்பட்டிருப்பேன்.

நீதிபதி: மெத்தச்சரி, ஏனென்றால் இவர்கள் (விடுதலைப் புலிகள்) Boader Meinhof மாதிரியிருந்திருந்தால் விடுதலைப்புலிகள் பயங்கரவாதக் குழு என்று கருதப்பட்டிருப்பர்.

சாட்சி: நான் நினைக்கிறேன். ✳

தொடரும்...

www.tamilarangam.net



# பிரபாகரன் படைக்கும் புதுமைப்பெண்கள்

பழ. நெடுமாறன்

04 - 12 - 96 இதழின் தொடர்ச்சி...

நம்முடைய இலக்கிய சான்றுகளானாலும் சரி, கல்வெட்டுகள் பட்டையங்களிலே சொல்லப்படுகின்ற செய்திகளானாலும் சரி, ஆண்கள்தான் ஆளரிமையைப் பெற்றிருந்தார்களே தவிர, பெண்களுக்கு அந்த உரிமை இருந்தது என்பதற்கான சான்றுகளில்லை. பெண்கள் அரசாண்டார்கள் என்பதற்கான சான்றுகளும் இல்லை.

மிகப் பிற்காலத்தில் வெள்ளையர்கள் இந்த நாட்டைப் பிடிப்பதற்குச் சற்று முன்னால், மதுரையிலே நாயக்க மன்னர்கள் ஆண்டபோது **ராணி மங்கம்மாள், ராணி மீனாட்சி** போன்றவர்கள் ஆண்டிருக்கிறார்கள். தங்களுடைய புதல்வர்கள் அல்லது பேரர்களுக்கு வயது வரவில்லை என்பதற்காக இடைக்காலத்தில் ஆட்சிப் பொறுப்பை இவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

சிவகங்கையிலே தனது கணவன் இறந்த பின்னர் **வேலு நாச்சியார்** ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவருக்குப் பக்கபலமாக **மருது சகோதரர்கள்** இருந்து நாட்டை ஆண்டார்கள். ஆனால் அந்த அரசிகள் கூட ஆயுதம் தாங்கிப் போர்க்களத்துக்குப் போனார்கள் என்ற வரலாறு கிடையாது.

பிற்காலத்தில் தோன்றிய புலவர்கள் பெண்களை இன்னும் கேவலமாகச் சித்தரிக்கத் தொடங்கினார்கள். பெண்பாற் புலவரான ஔவையார் அதாவது சங்க காலத்து ஔவையார் அல்ல பிற்காலத்தில் தோன்றிய ஔவையார், தான் பாடிய பாடல்களில் எல்லாம் பெண்களுக்கு சில இலக்கணங்கள் வகுத்துள்ளார். அவர் பாடிய ஆத்தி சூடியில்,

'தையல் சொல் கேளேல்'

(ஆத்தி சூடி–62)

பெண்கள் பேச்சைக் கேட்காதே! என்று ஒரு பெண்பால் புலவரான ஔவையாரே பாடிய யான சூழ்நிலை இருந்திருக்கிறது. அதே ஔவையார் கொன்றைவேந்தனில்,

'துடியாப் பெண்டிர் மடியின் நெருப்பு'

(கொன்றை வேந்தன்–41)

என்று கூறுகிறார். கணவன் சொற்படி கேட்காத பெண்கள், மடியிலே கட்டிக் கொண்ட நெருப்புக்குச் சமமானவர்கள் என்று இகழ்ந்து உரைக்கிறார்.

இன்னும் ஒரு படி மேலே போய்,

'தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்'

(கொன்றை வேந்தன் –42)

என்று கூறுகிறார். கணவனை இகழ்கின்ற பெண்டுகள், அவனுக்கு எமனாக வாய்த்தவர்கள் என்று சொல்கிறார். அதே கொன்றைவேந்தனில், சிறப்பாக பெண்கள் பூணவேண்டிய அணிகலன் எது என்பதைப் பற்றி அவர் சொல்லும்போது,

'பேதமை என்பது மாதர்க்கு அணிகலன்'

(கொன்றைவேந்தன் –66)

என்று சொல்கிறார்.

அதே ஔவையார், அவர் பாடிய மூதுரையில் கீழ்க்கண்ட பாடலைப் பாடியிருக்கிறார்.

"கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தோர் சொல் கூற்றம்

அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம்-மெல்லிய

வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே

இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்."

(மூதுரை–27)

என்று சொல்கிறார் பெண்பால் புலவரான ஔவையார் பாடிய பாடல்களிலே இத்தகைய மனப்போக்கு வெளிப்படு மேயானால், ஆண்பால் புலவர்கள் எப்படியெல்லாம் பாடியிருப்பார்கள் என்பதை நான் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அதற்கும் சில எடுத்துக் காட்டுக்களை நான் இங்கே தருகிறேன்:

**அதி வீர ராம பாண்டியன்** என்னும் மன்னன், தென்காசியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட பிற்காலத்துப் பாண்டியர்களில் ஒருவன். அவன் பாடிய வெற்றி வேற்கையில் பின்வருமாறு கூறுகின்றான்:

"பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல்"

(வெற்றி வேற்கை–11)

பெண்களுக்கு அழகு என்பது, கணவனோ மற்ற ஆண்களோ சொல்கிற வார்த்தைகளுக்கு அடி பணிந்து போக வேண்டுமே தவிர, அதை எதிர்த்துப் பேசக்கூடாது என்று இலக்கணம் வகுத்தனர். அதைப் போல, பிற்கால இலக்கியங்களில் ஒன்றான நீதி வெண்பாவில் பெண்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது மிகவும் மோசமான முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. பெண்கள் அதிகமாகப் பேசக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்த எழுந்த இப்பாடலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"பெண் ஒருத்தி பேசில் பெரும் பூமி தான் அதிரும்

பெண் இருவர் பேசில் விழும் வான் மீன்கள்-பெண் மூவர்

பேசில் அலை சுவறும் பேதையே! பெண் பலர்தாம்

பேசில் உலகு என்னாமோ பின்"

(நீதி வெண்பா– 31)

பெண்கள் ஆமைகளாக, ஊமைகளாக அடங்கிக் கிடக்க வேண்டும் என்ற கருத்தை இந்தப் பாடலின் மூலம் அந்தப் புலவர் வலியுறுத்துகிறார்.

குமரகுருபர அடிகளார் பாடிய நீதி நெறி விளக்கத்தில், பெண்களுக்குக் கணவன் தான் தெய்வம் என்ற கருத்தைப் பின்வருமாறு வலியுறுத்துகிறார்:

"குலமகட்கு தெய்வம் கொழுநனே! மன்ற

புதல்வர்க்குத் தந்தையும் தாயும்-அறவோர்க்கு அடிகளே தெய்வம்!

அனைவோர்க்கும் தெய்வம்

இளமுகப் பைம்பூண் இறை"

(நீதி நெறி விளக்கம்–27)

அவரைப் போலவே, அறநெறிச்சாரம் என்ற நூலைப் பாடிய முனைப்பாடியார் பின்வருமாறு பெண்களுக்கு இலக்கணம் வகுக்கிறார். என்னென்ன குணங்கள் ஒரு பெண்ணிடம் குடி கொண்டிருக்க வேண்டும் என்பதை அவர் பின்வருமாறு



சொல்கிறார்:

"கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நூணுடைமை

கண்டது கண்டு விழையாமை -விண்டு

வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி

உறுப்போடு உணர்வுடையாள் பெண்"

(அறநெறிச்சாரம்– 159)

என்று பெண்களிடம் இருக்க வேண்டிய குணாதிசயங்கள் பற்றி அவர் பாடி முடிக்கிறார். அடுத்து வந்த **பட்டினத்தார்** இன்னும் பெண்களைக் கேவலமாகக் கருதுகிறார். அவர் பாடிய திருஏகம்ப மாலையில் சொல்கிறார்:

"பெண்ணாகி வந்து ஒரு மாயப்

பிசாசம் பிடித்திட்டு என்னைக்

கண்ணால் வெருட்டி முலையால்

மயக்கிக் கடிதடத்துப் புண்ணாம்

குழி இடைத் தள்ளி என்

போதப் பொருள் பறிக்க

எண்ணாது உனைமறந் தேன்இறை

வாகச்சி ஏகம்பனே!"

(திருஏகம்ப மாலை)

இறைவனைச் சிலர் மறந்ததற்கு என்னென்ன காரணங்கள் என்று சொல்ல வந்தவர், அந்தப் பழியையும் பெண்மீது போடுகிறார். பெண்ணாகி வந்தது ஒரு மாயப் பிசாசம் என்று பெண்களை இகழ்ந்து உரைக்கின்ற போக்கு பிற்காலத்திலே நிலவியிருந்தது என்பதற்குப் பட்டினத்தாரின் பாடல் சரியான சான்றாகும்.

சங்க காலத்திலிருந்து நிலவி வந்த இத்தகைய போக்கை அடியோடு தகர்த்து எறிந்தான் **மகாகவி பாரதி** என்று சொன்னால் அது மிகையாகாது. ஔவையார் பாடிய ஆத்திசூடிக்கு எதிராக அவன் புதிய ஆத்திசூடியைப் பாடினான். அதிலே:

"தையலை உயர்வு செய்"

(புதிய ஆத்திசூடி– 50)

என்று கம்பீரமாக அவன் கூறினான்.

பெண்களை உயர்வு செய்கின்ற சமுதாயம்தான் உயர்ந்து ஓங்கும் என்ற கருத்தை வலியுறுத்த, **"தையலை உயர்வு செய்"** என்று சொன்னான். பெண்பால் புலவரான ஔவையார், **"தையல் சொற் கேளேல்"** என்று சொன்னார். ஆனால், இவன் ஒரு புதிய ஆத்திசூடி பாடி அதிலே **"தையலை உயர்வு செய்"** என்று முழங்கினான்.

**"மாதர்தமை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்!"**

என்று முழங்கினான்.

"பெண்மை வாழ்க என்று

கூத்திடுவோமடா!

பெண்மை வெல்கவென்று

கூத்திடு வோமடா!" என

செம்மாந்து பாடினான் பாரதி. பிற்காலத்துத் தமிழ்ப் புலவர்கள் பெண்களுக்கு வகுத்த இலக்கணத்துக்கு மாறாக, பாரதி தான் கற்பித்த புதுமைப் பெண்ணுக்கு இலக்கணம் வகுத்தான்.

"நிமிர்ந்த நன்னடை

நேர்கொண்ட பார்வையும்

நிலத்தில் யார்க்கும்

அஞ்சாத நெறிகளும்

நிமிர்ந்த ஞானச்

செருக்கும் இருப்பதால்

செம்மை மாதர்

திறம்புவ தில்லையாம்"

புதுமைப்பெண் என்று நெஞ்சு நிமிர்த்திப் பாடினான். தன்னுடைய புதுமைப்பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு அவன் இவ்வாறு இலக்கணம் வகுத்தான்.

பெண் விடுதலையில் பாரதியே மிகுந்த நாட்டம் கொண்டிருந்தான். அவனுடைய பாடல்களில் இந்தக் கருத்தை வலியுறுத்தினான். **'பெண்கள் விடுதலைக் கும்மி'** என்ற ஒரு தனிப்பாடலையே இதற்காக அவன் பாடினான். பெண்கள் விடுதலை பற்றி கும்மியடிக்க வந்த பாரதி இவ்வாறு கூறுகின்றான்.

"ஏட்டையும் பெண்கள்

தொடுவது தீமையென்றெண்ணி

யிருந்தவர் மாய்ந்து விட்டார்

வீட்டுக்குள்ளே பெண்ணைப்

பூட்டிவைப் போமென்ற


விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

(பெண்கள் விடுதலைக்கும்மி)

அவனுக்குப் பின்னால் **புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும்** அதே பாதையில் நடைபோடுகிறார். பெண் குழந்தையைத் தாலாட்டும் போது, எவ்வாறு தாலாட்ட வேண்டும் என்பதை அவர் பின்வருமாறு கூறுகின்றார்.

தொடர்ச்சி 10 ம் பக்கம்...

www.tamilarangam.net



# 1996 ஒரு

◆ **ஜனவரி 3:** திருமலை மாவட்டம் பன்குளத்தில் அமைந்திருந்த சிறிலங்கா விமானப்படையின் பயிற்சி முகாம் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாகியது. 4 விமானப்படையினர் கொல்லப்பட்டனர். 10 பேர் படுகாயமடைந்தனர்.

◆ **சனவரி 22:** சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான MI-17 ரக உலங்கு வானூர்தி விடுதலைப் புலிகளால் வெற்றிலைக் கேணிக்கு அருகாமையில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் மூன்று இராணுவ அதிகாரிகள், ஒரு கடற்படை அதிகாரி இருவிமானப்படை அதிகாரிகள் உட்பட 39 பேர் பலியாகினர்.

◆ **பெப்ரவரி 5:** அநுராதபுரம், கெப்பிட்டிக் கொலாவ என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

◆ **மார்ச்சு 4:** அம்பாறையில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப்புலிகளின் அதிரடித்தாக்குதல் அணி நடாத்திய அதிர்ச்சித் தாக்குதலில் 16 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். நான்கு போராளிகள் வீர மரணம் எய்தினர்.



◆ **மார்ச்சு 15:** மன்னார் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையின் மீது கடற்புலிகள் நடாத்திய தாக்குதலில் 2 அதிவேகப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு படகு கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டது.

◆ **மார்ச்சு 23:** மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறு மூலையில் சிறிலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் அதிரடிப் படையணி பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தியது. இத்தாக்குதலில் 40 படையினர் கொல்லப்பட்டு மேலும் 15 பேர் காயமுற்றனர்.

◆ **மார்ச்சு 30:** சுண்டிக்குளம் கடற்பரப்பில் மதியம் நடந்த கடற்சமரில் ஒரு டோரா அதிவேகப்படகு தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. மேலும் 2 பீரங்கிப்படகுகளும், கடற்படைக் கலமும் முழுமையாகச் சேதப் படுத்தப்பட்டது. இரு அதிகாரிகள் உட்பட 14 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

◆ **ஏப்ரல் 5:** அம்பாறையில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் 18 அதிரடிப்படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். நான்கு வீரவேங்கைகள் வீரச் சாவை தழுவிக் கொண்டனர்.

◆ **ஏப்ரல் 12:** அதிகாலை 1.30 மணிக்கு கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவிய கடற் கரும்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 அதிவேகத் தாக்குதல் கலன்கள், 3 விநியோகக் கப்பல்கள் தகர்க்கப்பட்டன. இரண்டு பெண் கரும் புலிகள் உட்பட 9 கடற்கரும் புலிகள் வீரச் சாவைத் தழுவிக் கொண்டனர்.





◆ **ஏப்ரல் 22:** மொறவேவா பன்குளம் பிள்ளையார் கோவிலடி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. ஏழு சிறிலங்காப்படையினர் கொல்லப்பட்டனர்.

◆ **ஏப்ரல் 23:** மூதூர் தங்கநகர் காவல் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது ஏழு பொலிசார் கொல்லப்பட்டனர்.

◆ **மே 6:** மட்டக்களப்பு மாவட்டம் பொலநறுவை எல்லைப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவ அணி விடுதலைப் புலிகளின் அதிரடித்தாக்குதலுக்கு இலக்கானது. 12 படையினர் கொல்லப்பட்டு மேலும் 18 படையினர் காயப்படுத்தப்பட்டனர். பவள் கவச வாகனம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது.

◆ **மே 11:** மட்டக்களப்புக்கம்– பொலநறுவைக்கும் இடையில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காப் படையினருக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றது. இத்தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டு மேலும் 15க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயம் அடைந்தனர்.

◆ **மே 19:** திருமலை மாவட்டம் கிகிலக்கடவை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. 7 இராணுவத்தினர், 9 ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர்.

◆ **மே 27:** திருமலை மாவட்டம் திக்காரோ என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவமுகாம் முற்றாக விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

◆ **யூன் 6:** தென்மராட்சியில் விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர்த் தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

◆ **யூன் 9:** பொலநறுவை மாவட்டம் வெலித் கந்தைக்கு அண்மித்த பகுதியில் விடுதலைப் புலிகள் இரண்டாவது முறையாக அதிரடித் தாக்குதலை நடாத்தினர். இதில் ஒரு அதிகாரி உட்பட 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

◆ **யூன் 9:** ஜெயந்திஜாய (பொலநறுவை மாவட்டம்) என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவ அணிமீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டு 4 பேர் படுகாயப்பட்டனர். மூன்று போராளிகள் வீரச் சாவு எய்தினர்.

◆ **யூன் 11:** காரைநகர்

www.tamilarangam.net

# நினைவு மீட்பு

கடற்படைத்தளத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரத் தாக்குதலில் கடற்படையின் 3 ரோந்துப் படகுகள் முற்றாகச் சிதறடிக்கப்பட்டன. இத்தாக்குதலில் கடற்கரும்புலி மேஜர் ரம்போ (பொன்னையா தமிழ் செல்வன், ஓமந்தை) வீரச் சாவைத்தழுவிக் கொண்டார்.

**யூன் 24 :** மட்டக்களப்பு மாவட்டம், குப்பிட்ட என்னும் பகுதியில் இருந்த பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளின் அதிரடித்தாக்குதலுக்கு இலக்கானது. ஆயுதங்களை அப்புறப்படுத்திய விடுதலைப் புலிகள் பொலிஸ் நிலையத்தை முற்றாகத் தகர்த்தனர்.

**யூலை 1 :** திருமலை மாவட்டம் கந்தளாய் பகுதியில் புலிகள் நடாத்திய பெரும் தாக்குதலில் ஒரு இராணுவ அணி முற்றாக அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் 2 அதிகாரிகள் உட்பட 32 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு பவள் கவச வாகனமும் அழிக்கப்பட்டது.



**யூலை 4 :** யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் தற்கொலைப் பணியிலான குண்டுத்தாக்குதலில் பிரிகேடியர் ஆனந்த கமலகொடி, சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆர். குணவர்த்தன மற்றும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**யூலை 14 :** யாழ் குடாநாட்டு தென்மராட்சி சரசாலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**யூலை 18 :** தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகப்பெரிய தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது அதிகாலை 1.30 மணிக்கு மேற்கொண்டனர். 1200க்கும் மேற்பட்டஇராணுவத்தினர் கொல்லப்பட்டு முகாம் விடுதலைப்புலிகளின் பூரணகட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. 332 விடுதலைப் புலிகள் வீரச் சாவை தழுவிக் கொண்டனர்.

**ஆகஸ்ட் 14 :** பூநகரி முகாம் பகுதியில் ஜீப் வண்டியில் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கன்னிவெடித் தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 12 இராணுவத்தினர் காயம் அடைந்தனர்.

**ஆகஸ்ட் 29 :** பொலநறுவை மாவட்டம் குடப்பொக்குண என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 27 பொலிசார் கொல்லப்பட்டனர்.

**செப்டம்பர் 15 :** மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் ஒன்று விடுதலைப் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது. இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர்.

**செப்டம்பர் 30 :** இன்று யாழ்நகரில் தட்டாதெருச் சந்தியில் இராணுவ ரோந்து அணி விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளானது. ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**ஒக்டோபர் 3 :** அம்பாறை பத்தாம் கொலனி பொலிஸ் நிலையம் இன்று விடுதலைப் புலிகளால் தாக்கி கைப்பற்றப்பட்டது. பத்து நிமிடங்கள் மட்டுமே நடந்த இத்தாக்குதலில் 8 பொலிசார் கொல்லப்பட்டனர்.

**ஒக்டோபர் 21 :** மட்டக்களப்பு மாவடிவேம்பில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில், 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்தனர். சுண்டிக்குளம் கடற்பரப்பில் நடந்த பெரும் சமரில் இரண்டு அதிவேகப்படகுகள் தாக்கியழிக்கப்பட்டது, இன்னொரு படகும், உலங்குவானூர்தியும்



சேதமாக்கப்பட்டது.

**ஒக்டோபர் 26 :** திருகோணமலை துறைமுகப் பகுதியில் சிறிலங்கா கடற்படைக்கு சொந்தமான டோரா பீரங்கிப்படகு கடற்கரும்புலித் தாக்குதலினால் நிர்மூலமாக்கப்பட்டது.

**நவம்பர் 7 :** வவுனியா கணேசபுரத்தில் இராணுவத்தின் 25 காவலரண்கள் ஒரே நேரத்தில் தாக்கி அழிக்கப்பட்டது. ஒரு இராணுவத்தினது உடல் விடுதலைப் புலிகளால் கொண்டு செல்லப்பட்டது.

**நவம்பர் 9 :** மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித்தாக்குதலில் 10 பொலிசார் கொல்லப்பட்டனர். பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

**நவம்பர் 16 :** வவுனியா பூவரசங் குளத்தில் சிறிலங்கா இராணுவத்தின் காவலரண்கள் விடுதலைப் புலிகளால் ஒரே நேரத்தில் தாக்கியழிக்கப்பட்டன. நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்கள், இராணுவ தளபாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

**டிசம்பர் 6 :** கைதடியில் குளிக்கச் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் ஒன்றை நடாத்தினர். 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் 5 பேர் காயமடைந்தனர்.

**டிசம்பர் 11 :** புக்குனாவை அதிரடிப்படை முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி நிர்மூலமாக்கப்பட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். 85 மில்லி மட்டர் ஆட்டிலரி உட்பட்ட ஏராளமான ஆயுதங்கள், தோட்டாக்கள், வெடிபொருட்கள், வாகனங்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இருபத்தியாறு வேங்கைகள் வீரமரணம் எய்தினர்.

**டிசம்பர் 17 :** கிழக்கில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையின் தலைமை அதிகாரி உபாலி சகபந்து ஜீப் வண்டியில் சென்று கொண்டிருந்த போது கரும்புலித்தாக்குதலுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டார்.

**டிசம்பர் 18 :** மண்கிண்டி மலையில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் சிறிலங்கா படையினர் 7 பேர் கொல்லப்பட்டனர்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுவிஸில் மெழுகுவர்த்திப் போராட்டம்

"அனைத்துலக மனிதஉரிமைகள்" தினமான 10-12-1996 செவ்வாய்க்கிழமையன்று பி.ப 4 மணிமுதல் மாலை 6.30 மணிவரை சுவிஸிலுள்ள அனைத்து மாநிலங்களின் நகரங்களிலும், முக்கிய பிரதேசங்களிலும் மெழுகுவர்த்திப் போராட்டம் நடாத்தப்பட்டது.

சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை அனைத்துலக சமூகங்களுக்கு அம்பலப்படுத்துமுகமாக நூற்றுக்கணக்கான மக்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் "அனைத்துலக மனித உரிமைகள் தினம்" (International Human Rights Day) என்ற வாசகம் பொறிக்கப்பட்ட "ரீசேட்" களை அணிந்தவாறு மெழுகுவர்த்தி தீபங்களை ஏந்திய வண்ணம் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தனர்.

அத்துண்டுப்பிரசுரத்தில் அண்மையில் சிறிலங்கா இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட கைதடியைச் சேர்ந்த கிருசாந்தி மற்றும் அவரது குடும்பத்தாரின் கொலைகள் பற்றிய சம்பவங்களும் அடங்கியிருந்தது. யேர்மன், பிரன்ச், இத்தாலி ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. மற்றும் அன்றைய தினத்தை ஒட்டி சிறிலங்காவின் மனித உரிமை மீறல் சம்பவங்களைச் சித்தரிக்கும் சுவரொட்டிகள் அனைத்துப் பொது இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழக நிதிக்காக

ஏற்றமிகு
எழுச்சி மாலைப்பொழுது

**காலம்: 18.01.1997 சனிக்கிழமை பிற்பகல் 4 மணி**

**இடம்:** Salle de l'aula **மண்டபம்.**
Av.de Bethusy 07 (Place de l'ours),
1005 Lausanne.

நிகழ்ச்சிகள்

தேசிய கொடியேற்றல், மௌன அஞ்சலி,
மங்கள விளக்கேற்றல், நடனங்கள், கவிதை,
சிறப்புரை, வில்லுப்பாட்டு(மகளிர் அணி), நாடகம்

**நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்.**

தொடர்புகட்கு:
021 - 648 7881
021 - 648 7537
021 - 799 23 04

மண்டபத்திற்கு செல்லும் வழி
Lausanne புகையிரத
நிலையத்திலிருந்து Epalinges
நோக்கிச் செல்லும் 5ம் இலக்க
பேருந்து மூலம் 8 வது தரிப்பிடம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்
அனைத்து தமிழீழ தேசபக்த மக்களையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளை மகளிர் அணி**

# பிரபாகரன் படைத்த ...

**"நாய் என்று பெண்ணை நாவில் வார்க்கும்**

**இப்புவிக்குத் தாய் என்று காட்டத்**
**தமிழர்க்கு வாய்த்தவளே!"**

"பெண் குழந்தைத் தாலாட்டு" என்று ஒரு பெண்ணே ஒரு தாலாட்டுப் பாடுவதாக அவர் வர்ணிக்கிறார்.

ஆண்களோடு பெண்களைச் சரி நிகர் சமானமாகக் கருத வேண்டும் என்று பாரதி கனவு கண்டான். அந்தக் கனவை இன்னும் தாய்த் தமிழகத்தில் நனவாக்கவில்லை என்று தான் கூற வேண்டும். இன்னும் தமிழர்களின் மனப்போக்கிலே பெரியளவிலே எந்த மாற்றமும் வந்து விடவில்லை. சங்க காலத்திலிருந்து இன்று வரை தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் பற்றிய மனப்போக்கு என்பது முற்றிலும் மாறிவிட்டது என்று கூற முடியாது. இன்னமும் தமிழ்ப் பெண்கள் அவர்களின் அடிமைத் தளையை உடைத்தெறிந்து விட்டார்கள் என்று சொல்வதற்கு வழியில்லை.

ஆனால், சேய்த் தமிழகமான தமிழீழத்தில், ஒரு 'மகத்தான புரட்சி' அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

"The great leap forward" என்று ஆங்கிலத்திலே சொல்லுவதைப் போல, பெண்களின் அடிமைத்தளையை உடைத்து எறியும் முயற்சியில் 'புலிப்பாய்ச்சல் வேகம்' அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாய்த் தமிழகத்தில் உள்ள பெண்கள் எவ்வாறு எல்லாம் இழிவு படுத்தப்பட்டார்களோ, எவ்வாறெல்லாம் ஆண்களுக்கு அடங்கி நடக்க வேண்டியவர்கள் என்று போதிக்கப்பட்டார்களோ, அதைப் போன்ற நிலைமைகள்தான், அங்கே தமிழீழத்தில் நிலவிற்று. மாற்றம் எதுவும் இல்லை. நீண்ட காலமாக, இங்குள்ள மூடப் பழக்கங்கள் அங்கேயும் பரவியிருந்தன. வரதட்சணைக் கொடுமை அல்லது சீதனக் கொடுமைகள் தமிழகத்தில் எப்படியுண்டோ அப்படி அங்கேயும் உண்டு. பெண் குழந்தை பிறந்திருக்கிறது என்று சொன்னாலே, முகஞ் சுழிக்கிற சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் இன்றும் இருந்து வருகிறது. அதனாலேதான், உசிலம்பட்டி போன்ற இடங்களில் பெண் சிசுக்களைக் கொல்லுகின்ற வேலைகள் நடக்கின்றன.

இப்படி மூட நம்பிக்கை கவிழ்ந்துள்ள ஒரு சமுதாயத்தில் "உண்மையான பெண் விடுதலை" எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை, விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் சிந்தித்த மாதிரி எந்தத் தமிழனும் சிந்திக்கவில்லை. வாய் அளவிலே பெண் விடுதலையைப் பற்றிப் பேசினால் அல்லது எழுதிக் குவித்தால் மட்டும் பெண் விடுதலை பெற்று விட முடியாது. பாரதி பாடியது போல், ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானம் என்ற நிலையை ஏற்படுத்தினால் ஒழிய, பெண் விடுதலை என்பது ஏட்டுச் சுரைக்காயாகத் தான் திகழும் என்பதை உணர்ந்த அவர் ஒரு புரட்சிகரமான திட்டத்தை வகுத்தார். விடுதலைப் போரில் பெண்களும் பங்கு பெற வேண்டும் என்று அவர் முடிவு செய்தார். அவர்களின் பங்களிப்பு எப்படி இருப்பது என்ற வினா எழுந்த போது, சங் காலத்துப் பெண்களைப் போல, அவர்களுடைய தந்தைமாரையோ, சகோதரர்களையோ, கணவனையோ அல்லது புதல்வர்களையோ போருக்கு அனுப்பி வைப்பதோடு பெண்களின் பங்களிப்பு நின்று விடக் கூடாது என முடிவு செய்தார்.

முதல் நாட் போரில் தன்னுடைய தந்தையை இழந்தாள். அடுத்த நாட் போரிலேயே தன்னுடைய கணவனை இழந்தாள். மூன்றாம் நாள் போருக்கு அவளே வாளைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள் என்ற நிலை, சங்க காலத்திலும் இல்லை அதற்குப் பிற்பட்ட காலத்திலும் இல்லை. ஆனால், பிரபாகரன் அவர்களின் தமிழீழத்தில், தன்னுடைய தந்தையோ சகோதரர்களோ விடுதலைப் படையில் சேர்ந்து ஆயுதம் தூக்கி, தங்கள் மண்ணை விடுவிக்கப் போராடுவதற்கு முன்வராமல் பதுங்கியிருந்தாலும், அந்த வீட்டில் இருந்த பெண்கள் வெளியேறி வந்து விடுதலைத் தானையில் தங்களை அங்கத்தவர்களாக்கிக் கொண்டு ஆயுதப் பயிற்சி பெற்று, ஆயுதம் தூக்கித் தங்கள் மண்ணை விடுவிக்கப் போராடுகிறார்கள் என்ற நிலைமையைப் பிரபாகரன் ஏற்படுத்தினார். இதைத்தான், 'புலிப் பாய்ச்சல் முன்னேற்றம்' என்று நான் குறிப்பிட்டேன். ஏனென்று சொன்னால் வீட்டை விட்டு வெளிவராத பெண்கள் – படி தாண்டாத பத்தினிகளாக விளங்கிய பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறி, போர்ப்படையிலே சேர்ந்து, ஆயுதப் பயிற்சி பெற்று ஆண்களோடு சரிநிகர் சமானமாக நின்று, களத்திலே முன்னணியிலேயே போரிட்டு, தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்கிற ஒரு சூழ்நிலையைப் பிரபாகரன் உருவாக்கியது என்பது அற்புதமானது. இது பெண்களின் அடிமைத் தளையைச் சுக்குநூறாகத் தகர்த்தெறிந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. வாயளவிலே பெண் விடுதலையை அவர் பேசவில்லை. ஒரு மண் விடுதலை பெற வேண்டுமென்றால், அதிலே ஆணுக்கு எவ்வளவு பங்களிப்பு இருக்கிறதோ அதைப் போன்ற பங்களிப்பு பெண்களுக்கும் இருந்தால்தான் பெண் விடுதலை என்பது உண்மையிலேயே சாத்தியமாகும் என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டு உணர்ந்தார்.

ஒரு மண்ணை விடுவிப்பதும் அந்த மண்ணைப் பாதுகாப்பதும் ஆணின் கடமை என்று கருதிய சமுதாய மனப் போக்கை அவர் மாற்றினார். அத்தகைய மனப் போக்கு நிலவுவதால்தான், ஆணைச் சார்ந்து பெண் வாழ வேண்டிய நிலைமை இருக்கின்றது என்பதை அவர் உணர்ந்தார்.

ஆண் வலிமை நிறைந்தவன், அவனால் தான் தன்னையும் தன் நாட்டையும் தன்னைச் சார்ந்திருக்கின்ற மனைவியையும் மக்களையும் பாதுகாக்க முடியும் என்ற நிலைமையை மாற்றி அமைத்தால் ஒழிய, பெண் விடுதலை என்பது உண்மையில் நடைமுறையில் இருக்காது என்பதை அவர் உணர்ந்தார். ஒரு பெண் தன்னுடைய தந்தையைச் சார்ந்து வாழ்கிறாள். பின்னாலே திருமணமாவுடன், தன்னுடைய கணவனைச் சார்ந்து வாழ்கிறாள். அவனுக்குப் பின்னாலே தன்னுடைய புதல்வனைச் சார்ந்து வாழ வேண்டிய நிலைமையிலே இருக்கிறாள்.

ஆகவே அவள் யாரையாவது சார்ந்துதான் வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலையை மாற்றினால் ஒழிய, பெண்ணடிமைத்தனம் போகாதென்பதை அவர் புரிந்திருந்தார். எனவேதான், விடுதலைப் புலிகள் இயக்கத்திலே பெண்களைச் சேர்ப்பது என்பதை முடிவு செய்தார். அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தார். உலக நாடுகளிலே, அது அரச சார்பான இராணுவமானாலும் எதிர்த்துப் போராடுகிற புரட்சிப் படைகளானாலும் பெண்களின் பங்களிப்பு என்பது அதில் என்ன? அவர்கள் காயமடைந்த வீரர்களுக்கு மருந்து கட்டுவது, அவர்களுக்கு பணிவிடை புரிவது அத்தகைய பணிகள்தான் பெண்களுக்கு வழங்கப்பட்டன. பெண்கள் ஆயுதம் தாங்கிப் போராடுபவர்களாக எந்த நாட்டிலும் அனுமதிக்கப்படவில்லை. இந்தியாவிலும், ஏன் வல்லரசான அமெரிக்காவிலும் சமீப காலத்தில்தான் பெண்களை ஆயுதம் தாங்குவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். போர்ப் பயிற்சி கொடுக்கிறார்கள். ஆனால், அதற்கு முன்னதாகவே அத்தகைய நிலையை உருவாக்கியவர் பிரபாகரன்தான் என்பதை எண்ணும் போது நம்முடைய உள்ளம் பெருமிதத்தால் பூரிக்கின்றது.

வெறும் ஆயுதப் பயிற்சி பெற்று விடுவதனாலேயே பெண் விடுதலை சாத்தியமாகி விடுமா என்று சிலர் நினைக்கலாம். ஆனால், பெண்ணடிமைத் தனத்திற்கு முக்கியமானது காலம் காலமாக அவர்கள் மனதிலே ஆணுக்கு அடங்கி நடக்க வேண்டியவள் என்ற எண்ணம் பதிப்பிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய இலக்கியங்களும் அதைத்தான் பதிப்பித்தன என்பதை ஏற்கனவே இந்தக் கட்டுரையின் தொடக்கத்திலே நாம் பார்த்தோம். அந்த எண்ணத்தை அடியோடு பெண்கள் உள்ளத்திலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காகத்தான், பிரபாகரன் அவர்கள் இந்த நிலையை எடுத்தார். இதன் விளைவாக இன்றைக்குத் தமிழீழத்திலிருந்து பெண்கள் தலை நிமிர்ந்து நடக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பல்வேறு களங்களிலே முன்னணியிலே நின்று பெண்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்கின்ற வீரம் செறிந்த நிகழ்ச்சிகளை நாம் அன்றாடம் கேட்கிறோம். தன்னைத் தானே தியாகம் செய்து கொண்டு எதிரியை அழிப்பது என்பதற்காக உருவாக்கப்பட்ட கரும் புலிகள் இயக்கத்திலும் இன்று பெண்கள் சேர்ந்து தங்கள் உயிரைத் துச்சமாக மதித்துத் தங்கள் நாட்டுக்காகத் தங்கள் மண்ணின் விடுதலைக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்கின்ற அற்புதமான வீரஞ் செறிந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கேட்டு நம்முடைய மெய் சிலிர்க்கின்றது. இதன் விளைவாக, தமிழீழப் பெண்கள் அந்த மண்ணிலே தலை நிமிர்ந்து நடக்கிறார்கள். அவர்கள் உள்ளங்களைக் கவ்வியிருந்த ஒரு மாயை இன்று விலக்கப்பட்டிருக்கிறது. ஆண்கள் என்னென்ன ஆயுதங்களைத் தூக்கி என்னென்ன வீர சாகசங்களைச் செய்வார்களோ அதை விடச் சிறப்பாகத் தங்களாலும் செய்ய முடியும் என்ற ஒரு பெருநம்பிக்கை அவர்களது உள்ளங்களிலே துளிர்விட்டிருக்கிறது. அதையே செயல் வடிவத்திலும் அவர்கள் இன்றைக்கும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, பெண் விடுதலையைப் புலிப் பாய்ச்சல் வேகத்தில் முன்னேற்றப் பாதையிலே பிரபாகரன் கொண்டு போய்க் கொண்டிருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது.

பன்னெடுங்காலமாகத் தமிழ் சமுதாயத்தில் நிலவி வந்திருக்கின்ற பெண்ணடிமைத் தனத்தை அடியோடு தகர்த்தெறிவதற்கான புரட்சிகரமான முயற்சி தமிழீழத்தில் பிரபாகரன் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் இந்தப் புரட்சி அலை, விரைந்து பரவும் காலம் அதிக தூரத்தில் இல்லை. ✷ (முற்றும்)

# சிறுகதை

கெர்பன் அடிவாரத்திலிருந்த பெரும்பாலான கிராமங்கள் முறியடிக்கப்பட்டு விட்டன. அவற்றில் வசித்தவர்கள் அகதிகளாய் பார்டான் கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். மற்ற சில கிராமங்கள் இன்னமும் தாக்குப் பிடித்துக் கொண்டிருந்தன.

மக்கள் உணவைப் பகிர்ந்து




உண்டார்கள், உறைவிடங்களைப் பகிர்ந்து தங்கினார்கள், பார்டானில் காப்பரண்களை அமைத்து நூற்றுக் கணக்கானோர் ஆயுதமேந்தி காவல் வேலையில் இருந்தார்கள். அவர்கள் சாவுக்கு அஞ்சாமல் போராடினார்கள். தீவிர எதிர்த் தாக்குதல் போரை நடத்தினார்கள். என்றாலும் "பறிக்கப்பட்ட" கிராமங்களில் திரும்பவும் கால் கொள்ள அவர்களால் முடியவில்லை.

காற்று அதிர்ந்து நடுங்கியது. வானத்தில் வெறி கொண்டு சுழன்று பறந்து வந்த பகை விமானங்களில் இருந்து குண்டுகள் சீறி விழுந்தன. வீடுகளைத் தூள் தூளாகச் சிதறடித்தன. மரங்களைப் பிய்த்துப் போட்டன. எல்லாவற்றையும் குண்டுச் சிதறல்கள் பாய்ந்து தகர்த்தன. மூண்டெரியும் நெருப்பொளியில் மரணத்தையும்,சர்வ நாசத்தையும் கண்டு களிப்படைந்த பின்னரே விமானங்கள் அந்தக் கிராமத்தின் வானத்தைப் பிரிந்து சென்றன.

ஆயினும் பார்டான், எதிர்த்தாக்குதலை விடாது தொடர்ந்தது. காவல் போராளிகள் காப்பகழ்களைத் தோண்டி அந்தப் பள்ளங்களோடு இணைந்து பதுங்கியிருந்தார்கள். அவ்வப்போது கிராமத்தின் மீது பாயவரும் கவச வாகனங்களை, திடீரெனத் துள்ளியெழுந்து தாக்கி, எதிரிகளை நிலைகுலையச் செய்தார்கள்.

தாக்குதல் முயற்சி பின்னடைந்து எதிரிகளின் கவச வாகனங்கள் நீங்கிய பின், கிராமத்தில் அன்றைய இரவு முழுதும் சாவு பயம் விரவிய பயங்கர மௌனம் நிலவியது.

அரண் மேடுகளுக்கு அப்பாலிருந்த எதிரிப் படைகளின் சினம் மேலும் பொங்கியது. அவர்கள் அடுத்த நாளின் காலைப் புலரலோடு பார்டானுக்கு வந்தார்கள். கிராமக் காப்பரண்களைப் பிளந்து ஊடுருவி ரத்தவெறி கொண்டு தாக்கினார்கள். பதுங்கு குழிகளே பலருக்குச் சவக் குழிகளானது. சுட்டும், கோடரியால் வெட்டியும் ஏராளமானோரைச் சாகடித்தார்கள். அவர்களது டாங்கிகளின் பூதக்கால்கள் பிணங்களையும் நசுக்கித் தடம் பதித்துச் சென்றன.

ரத்த பயங்கரமிக்க ஆக்கிரமிப்புக் கும்பல் மருதியையும், கிராமச் சதுக்கத்தையும் பெரும்பாலும் கைப்பற்றி விட்டது. என்றாலும் இந்த ஜீவ மரணப் போராட்டத்தில் காவல் போராளிகள் தொடர்ந்து போராடினார்கள்.

அப்போது, கிழவர் மர்சித் அலயான் தன் கனத்த சரீரத்தோடும், மயிர் அடர்ந்த தாடியோடும் வெளிவந்தார். தாளாத துக்கத்தால் அழுந்தி அவர் தலை தாழ்ந்திருந்தது. முகம் திண்மை பெற்று இறுகியிருந்தது. உறங்கும் நேரத்தில் கொசுக்களை விரட்டுவதைப் போல் அவர் தன் கைத்தடியை அங்குமிங்கும் சுழற்றி காற்றைக் கோதியவாறே வந்து நின்று கர்ஜித்தார்.

"இளைஞர்களே, இன்று நமக்குச் சாவுதான் உன்னதமானது. வதைபடு வதைக் காட்டிலும் சாவோம். நம் மூதாதையரின் எலும்புக் கூடுகளுக்கப்பால் புதிய வாழ்விற்காகப் போராடிச் சாவோம்"

மக்கள் போராளிகளின் வீரஞ்செறிந்த எதிர்த் தாக்குதலுக்கு ஈடுதந்து நிற்கத் திணறி நில ஆக்கிரமிப்புக் காதகர்கள் மலையடிவாரங்களை நோக்கிச் சிதறியோடினர். மக்கள் அவரவர்க்குரிய சடலங்களை அடையாளம் கண்டு, அவற்றைப் பெரிதாய் வாய் பிளந்து கிடந்த இடுகாட்டில் தம் மூதாதையரின் எலும்புகளுடன் சேர்த்துப் புதைத்தனர்.

பிறகு அவர்கள் "சூழ்நிலை"யின் எல்லாப் பக்கங்களிலும் நெஞ்சம் செலுத்தி விவாதித்தார்கள், நிலைமையின் பாதக அம்சங்களை ஆராய்ந்தார்கள். முடிவில், பெண்களும், குழந்தைகளும் கிராமத்தை விட்டு வெளியேறுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

சோகம் தொற்றிய முகங்களுடன் பெண்கள் குழந்தைகளையும், சிறிய துணி மூட்டைகளையும், சுமந்தவாறு இருள் அடர்ந்த அந்த இரவில் பார்டான் கிராமத்திலிருந்து புகலிடம் தேடி நகர்ந்தனர். அவர்கள் புழுதியும் புதர்களும் நிறைந்த சாலை வழியே "பெய்ட் ஜிப்ரான்" கிராமத்தை நோக்கிச் சென்றார்கள். தத்தம் கணவர்களையும், போர் அரங்கில் அவர்களோடு இடம் பெறும் மரணத்தையும், விட்டுச் செல்லும் வீடுகளையும், எண்ணிக் கலங்கி, "சொந்த மண்ணில் குடும்பமாய் ஒன்றிணையும்" நினைவு நெஞ்சில் ஊடாட, அந்தப் பெண்கள் மௌனமாய் நடந்தார்கள். பெய்ட்ஜிப்ரானை அடைவதற்குள் எதிரிகள் குறுக்கிடுவார்களோ என்ற அச்சத்தால் திகில் நிறைந்து தயங்கித் தயங்கிச் சென்றார்கள்.

மறுநாள் காலை காது செவிடுபடும் வெடி முழக்கங்களோடு விடிந்தது. எங்கும் ஒலிக் குழப்பம். சண்டை விமானங்களின் குண்டு மாரி வீடுகளின் கூரையைச் சிதறடித்துக் கொண்டு சுவர்களை ஊடுருவின. தோட்டங்கள் தீயில் கருகின. கிராமத்தைச் சுற்றிலுமிருந்த மரங்கள் வேரடி மண்ணோடு வீழ்த்தப்பட்டு அழிக்கப்பட்டன. குண்டுகள் விழுந்து புகைத் தூண்களும், நெருப்பு சுவாலைகளும் எழும்பின. தரை அதிர்ந்தது.

கிழவர் மர்சித் அலயான் தனது வழக்கமான பிரார்த்தனைகளை முடித்த பின்னும் கைகளை அகல விரித்து வேறு சில வேண்டுதல்களை முணுமுணுத்தவாறே வந்தார். சுற்றிலும் பார்வையைச் செலுத்திய பிறகு,

"ஓ கடவுளே! இது நரகம், இது சாவின் ஸ்தலம், நெருப்பின் உலகம், பிரிவின் பூமி" என்று இரைந்நார். தொடர்ந்து செவிப்பறை கிழியும்படி கேட்கும் போர் ஓசைகளும், சாவுக் கூச்சல்களும் அவர் மனத்தைக் குதறிப் புண்படுத்தின. ஆத்திரம் முகத்தில் பொங்கி வழிந்தது. குரல் வறண்டது. "கடவுளே, நீ இறந்து விட்டாய்" என்று முனகினார்.

பிறகு பெருமூச்செறிந்து குண்டு மாரியால் அழிந்த மரங்களையும், தாக்குதலுக்குத் தப்பித்த மரங்களையும், அவற்றின் அடியில் கறுத்துக் கிடக்கும் நிழற் கிளைகளையும் கவலை நிலவும் கண்களால் பார்த்தவாறே உலவிக் கொண்டிருந்தார்.

அப்போது யாரோ தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டதும் நின்றார்.

மரக் கிளைகளினூடாக அவரது மகன் "முகமத்" தலைதெறிக்கத் தன் துப்பாக்கியை ஏந்தியவாறே ஓடி வந்தான். அருகில் வந்தடைந்ததும், தனது தந்தையின் கண்களை நோக்கி உடல் பதறப் பதறச் சொன்னான்.

"இனி அவ்வளவுதான். நம்பிக்கைக்கு இடமே இல்லை அப்பா. எவ்வளவு சீக்கிரமோ அவ்வளவு சீக்கிரம் இந்த இடத்தை விட்டு வெளியேறவேண்டும். கிளம்புங்கள்"

இதைக் கேட்டதும் கிழவரின் முகம் ஆச்சரியத்தால் சுளித்தது. பிறகு கோபமும் ஏளனமும் தீப்பொறிகளாய் தெறிக்க, "வெளியேற வேண்டுமா? எங்கே? தாய் நிலத்தை விட்டு எங்கே



போவதாம்! நமது மூதாதையரின் எலும்புகளைப் பிரிந்து எங்கே செல்வதாம்! சொல் முகமத், இந்தக் கிழ வயதில் நான் வதைபட்டுச் சாவதையா நீ விரும்புகிறாய்?" என்று எரிந்து விழுந்தார்.

ஆனால் மனதில் எந்த அசைவுமின்றி முகமத் தன் தந்தையோடு வாதத்திலிறங்கினான். "முடிந்த வரை நாங்கள் போராடினோம். அப்பா, கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். அவர்களிடம் போர் விமானங்களும் நவீன டாங்கிகளும் இருக்கின்றன. எங்களிடம் இருப்பவை துப்பாக்கி மட்டுமே. ஆனால் தேவையான துப்பாக்கிகள் கூட சேமிப்பில் இல்லை. இந்த நிலையில் அவர்களை விரட்டியடிப்பது நடக்கிற காரியமா?"

மகனின் கோழை ஆத்மாவை அறிந்து கிழவர் மனங் கசந்தார். "நீ என்ன, எல்லாம் முடிந்து விட்டதாகவா சொல்கிறாய்? இல்லையப்பா இல்லை. ஒரு சமயம் "ஷேக் இஸ்ஜெத்தின்" அவரது சீடர்களுக்கு "மனிதனாய் இற" என்று அறிவுறுத்தினார். நான் "மனிதனாய்" சாவேனே ஒழிய உன்னோடு வரப் போவதில்லை, நீ போகலாம்" எனச் சொல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

பிறகு சட்டென்று சுழன்று திரும்பி, "உன் துப்பாக்கியைக் கொடுத்து விட்டுச் செல். இனி அது உனக்குத் தேவைப்படாது" என்று ஆத்திரம் ஆத்திரமாய்க் கட்டளையிட்டார்.

தந்தையின் முகத்தில் வீசிய கோபக் கனலின் சூடு தாளாமல், முகமத் "ஆனால்..... ஆனால் அப்பா....." என ஏதோ சொல்ல முயன்று நாவெழாமல் மௌனமாய் நின்றான்.

கிழவர் மறுபடியும் கத்தினார், "கொடு என்றால் அதை என்னிடம் கொடுத்துவிட்டுச் செல் என்று அர்த்தம்". முகமத் அவனது வாழ்நாளில் என்றுமே பார்த்திராத புதிய தோற்றத்தில் தன் தந்தையைக் கண்டான். அவரது கோபரூபம் அவனை அச்சுறுத்தியது. துப்பாக்கியைத் தந்து விட்டு தலை குனிந்து நின்றான். செல்லும் முன் அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு தந்தையின் கன்னத்தில் முத்தமிட்டுப் பிரிய விரும்பினான். ஆனால் அவரோ, "போ, போய்த் தொலை. கோழைப் பதரே, என் கண் முன் நிற்காதே" என்று தனது முழுப் பலத்தையும் செலுத்தி அவனது நெஞ்சை நெக்கித் தள்ளினார்.

அடுத்து வந்த சில நாட்களில் ஏராளமான கிராமங்கள் எதிர்ப்பில் பின்வாங்கி வீழ்ந்தன. உணவுப் பொருட்களைச் சேகரிக்கவும், படுக்கை விரிப்புக்களை எடுத்துவரவும் மக்களில் பலர்

அவரவர் கிராமங்களுக்குச் சென்றார்கள். முகமத்தும் தனது பார்டான் கிராமம் நோக்கி புதர்கள் சிலிர்த்திருக்கும் சரிவுப் பாதை வழியே சென்றான். முட்களில் பதிந்து சென்ற அவன் பாதங்களில்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

www.tamilarangam.net



# கேணல் கிட்டு ஞாபகார்த்த எழுச்சி விழா

**எழுச்சி விழா நிகழ்ச்சிகள்**

- தேசிய கொடியேற்றல்
- மாவீரர் அஞ்சலி
- கேணல் கிட்டு உருவப்படம் திரைநீக்கம் செய்தல்
- மங்கள விளக்கேற்றல்
- சிறப்புரை
- சிறுவர் எழுச்சி நடனங்கள்
- கவிதாஞ்சலி
- "புரட்சி கானங்கள்" இசை நிகழ்ச்சி
- நாடகம்
- நன்றியுரை

தமிழீழமே தன் மூச்சென நினைந்து வாழ்ந்த எங்கள் தானைத் தளபதி கேணல் கிட்டு மற்றும் லெப். கேணல் குட்டி சிறி, மேஜர் வேலன், கடற்புலி கப்டன் குணசீலன், கடற்புலி கப்டன் நாயகன், கடற்புலி கப்டன் ஜீவா, கடற்புலி லெப். நல்லவன், கடற்புலி லெப். அமுதன், கடற்புலி தூயவன் ஆகியோர் 16.01.93 அன்று இந்திய அரசின் சதியால் வங்கக் கடலில் மரணித்த 4ம் ஆண்டு நினைவு அஞ்சலியும் எழுச்சி விழா நிகழ்வுகளும்.

**"கிட்டு ஒரு தனி மனித சரித்திரம்"**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள் - சுவிஸ் கிளை**

கிட்டு நீ சாகவில்லை ! ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கின்றாய் !!
- தேசிய தலைவர் வே. பிரபாகரன்

**11 . 01 . 97 சனி மாலை 5.00 மணி**

**LIMMATHAUS, LIMMATSTR. 118, ZURICH**

---

தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளையினர் நடாத்தும்

*தளபதி கேணல் கிட்டுவினதும் ஒன்பது வீரவேங்கைகளினதும்*

# நான்காம் ஆண்டு நினைவுகூரல்

**இடம்:** VESTERSKOLEN, 7430 EKAST
**காலம்:** 11 . 01. 97 சனிக்கிழமை மாலை 16.00 மணி

**நிகழ்ச்சிகள்**

- கொடிவணக்கப் பாடல்
- விளக்கேற்றலும், ஈகைச்சுடரேற்றல் நிகழ்வும்
- வரவேற்புரை
- சிறுவர் பேச்சுக்கள்
- பாடலுக்கு அபிநயம்
- குறு நாட்டிய நாடகம் (தயாரிப்பு - கலை பண்பாட்டுக்கழகம்)
- நாடகம் (தயாரிப்பு - கலை பண்பாட்டுக்கழகம்)
- தமிழீழ இசைக்குழு வழங்கும் தித்தித்திக்கும் தேனிசைப் பாடல்கள்
- நன்றியுரை

அரங்கினுள் மதுபானம் அருந்துதல், மதுபோதையில் வருதல் தடைசெய்யப்பட்டுள்ளது. புகைப்படம் எடுப்பதற்கு முன் அனுமதி பெறல் வேண்டும்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

---

தமிழர்கலைபண்பாட்டுக்கழக யேர்மனியக்கிளை நடாத்தும்

# கேணல் கிட்டு நினைவு ஓவியப்போட்டி 1997

தமிழர் கலைபண்பாட்டுக்கழக யேர்மனியக்கிளை வருடாவருடம் நடாத்திவரும் கேணல் கிட்டு நினைவுப் போட்டிகளின் 1997ம் ஆண்டிற்கான போட்டியை நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

**ஓவியப்போட்டிக்கான விதிகள்**

* போட்டியிற் பங்குபற்றுவோர் ஓவியங்களை வரைந்து, வரையப்பட்ட ஓவியத்தின் பின்பக்கத்தில் கையொப்பமிட்டு, பெயரையும் முகவரியையுங் குறித்து, விண்ணப்பத்துடன் இணைத்து கீழே குறிப்பிட்டுள்ள தொடர்பு முகவரிக்கு 05-01-1997ற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள் பின்னொருநாளில் ஓவிய இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவர்.

* ஓவியங்கள் போட்டியாளரின் சுதந்திரமான சுயமான கற்பனையில் வரையப்படல் வேண்டும்.
* கீழ்ப்பிரிவினரும், நடுப்பிரிவினரும் வரையவேண்டிய ஓவியத்தின் அளவு: 21செ.மீ.x30செ.மீ.

பயன்படுத்தக்கூடிய வர்ணம்:
வர்ணக்கட்டி (Farbkrcide), மெழுகுவர்ணம் (Wachsmalstift), வர்ணஎழுதி (Bundstift), வரைவுவர்ணம் (Tuchfarbe), வர்ணஇழைத்தடி (Filzstift), நீர்வர்ணம் (Wasserfarbe),

* மேற்பிரிவினரும் அதிமேற்பிரிவினரும் வரையவேண்டிய ஓவியத்தின் அளவு: 30செ.மீ.x42செ.மீ.

பயன்படுத்தக்கூடிய வர்ணம்: நீர்வர்ணம் (Wasserfarbe) மட்டுமே.

* **ஓவியத்திற்கான தலைப்பு:**

கீழ்ப்பிரிவு: போட்டியாளரின் விருப்பத்திற்கமைய தலைப்பிடலாம்.
நடுப்பிரிவு: எனது தாய்மண்.
மேற்பிரிவு: வாடும் பயிருக்கு நீராய் இருப்போம்.
அதிமேற்பிரிவு: உறவும் உயிரும் அங்கே! உடலம் மட்டும் இங்கே!.

* பரிசுக்குரியவராகத் தேர்ந்தெடுக்கும் பட்சத்தில், வயதை உறுதிப்படுத்த அடையாளஅட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கேட்கப்படுவர்.
* **பிரிவுகளுக்கான வயதெல்லை:**

கீழ்ப்பிரிவு: 01-01-1987 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள்.
நடுப்பிரிவு: 31-12-1981ற்கும் 01-01-1987ற்கும் இடையில் பிறந்தவர்கள்.
மேற்பிரிவு: 31-12-1977ற்கும் 01-01-1982ற்கும் இடையில் பிறந்தவர்கள்.
அதிமேற்பிரிவு: 31-12-1977அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.

* விண்ணப்பஞ்செய்வதற்கான இறுதிநாள்: 05-01-1997
* விண்ணப்பங்களும் ஓவியங்களும் அனுப்பவேண்டிய முகவரி கீழே இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ளது.

**தமிழர்கலைபண்பாட்டுக்கழக யேர்மனியக்கிளை நடாத்தும்**
**கேணல் கிட்டு நினைவு ஓவியப்போட்டி 1997**

விண்ணப்பப் படிவம்

1) விண்ணப்பதாரரின் முழுப்பெயர்: (திரு,திருமதி,செல்வன்,செல்வி:)
------------------------------------------

2) பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர்:-----------------

3) முகவரி:-------------------------------------

4) தொலைபேசி இலக்கம்:-----------------------

5) விண்ணப்பதாரரின் பிறந்தநாள்: நாள்---மாதம்---ஆண்டு---

6) பங்குபற்றவிருக்கும் பிரிவு: கீழ்ப்பிரிவு, நடுப்பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு

மேலே குறிப்பிட்டுள்ள பெயருடைய விண்ணப்பதாரராகிய நான், கேணல் கிட்டு நினைவு ஓவியப் போட்டியிற் பங்கேற்க விரும்புகின்றேன் என்றும், நடுவர் தீர்ப்பை முழுமனதுடன் ஏற்பேனென்றும் உறுதி கூறுகிறேன்.

------------------ பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம்

------------------ விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்------

**Kulturelle Organaization - der Tamilen e.V**
**Posttach: 1160**
**37441 Bad Sachsa**

தமிழர்கலைபண்பாட்டுக்கழகம் யேர்மனியக்கிளை.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்



## முதலாம் பாகம்

### அத்தியாயம் பத்து

(தொடர்ச்சி)

கிற்றி தன்னுடைய அனுமதிப் பத்திரத்தை குழந்தைகளின் பிரிவின் அருகாமையில் இருந்த கராஓலொஸ்சின் 57வது வளாக வாசலில் நின்ற பிரிட்டிஷ் காவல் வீரனிடம் கொடுத்தாள்.

"திருமதி. கிற்றி பிறமென்ற் நீங்களா?" திரும்பித் தலையசைத்த கிற்றி ஒரு இளம் மனிதனைக் கண்டாள். அவன் சிரித்துக் கொண்டே கையைக் குலுக்குவதற்காக நீட்டினான். இவன் இனத்தவனை விட (அரியை) விட கொஞ்சம் சிநேகபூர்வமானவன் போல் தோன்றுகிறான் என்று நினைத்துக் கொண்டாள்.

"என் பெயர் டேவிட் பென் அமி. அரி என்னை உங்களைச் சந்திக்கச் சொன்னார். இன்னும் சில நேரத்தில் அவர் வந்துவிடுவார்" என்றான்.

"பென் அமி என்பதற்கு என்ன கருத்து? நான் சமீப காலமாக எபிரேயர் பெயர்களில் ஆர்வம் கொள்ளத் தொடங்கியிருக்கிறேன். அதற்கு "எங்களின் மகன்" என்று கருத்து நீங்கள் "ஒப்பரேசன் கிடியோன்" திட்டத்துக்கு உதவுவீர்கள் என நம்புகிறோம்.

"ஒப்பரேசன் கிடியோன்?"

"ஆமாம் அதுதான் அரியின் திட்டத்திற்கு நான் இட்டிருக்கும் பெயர். உங்களுக்கு வேதாகமப் பகுதிகள் நினைவிருக்கிறதா....? ஆகமம் மைடியனற்று (Midianites) களுக்கெதிராக கிடியோன் முன்னூறு போர் வீரர்களை தெரிந்தெடுத்தார். பிரிட்டிஷ்காரருக்கு எதிராக நாங்களும் முன்னூறு பேரைத் தெரிந்தெடுத்திருக்கிறோம். நான் அந்தச் சமாந்தர நிகழ்வை மீறிச் செல்ல முயல்கிறேனோ தெரியவில்லை. அரியும் என்னை உணர்ச்சிபூர்வமாகக் காரிய மாற்றுபவன் எனக் குற்றம் சாட்டுவார்."

கிற்றி ஒரு மாலை வேளைக்கு தயாராக வந்திருந்தாள். ஆனால் இப்போ இந்த மென்மையான தோற்றமளிக்கும் இளைஞன் அதற்குத் தேவையில்லாமல் ஆக்கி விட்டான். பகல் வேளை முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. குளிரான காற்றொன்று ஒரு சிறு புளுதிப்புயலை உருவாக்கியது. கிற்றி தனது மேலங்கியை அணிந்து கொண்டாள். முகாமின் அடுத்த அந்தத்தில் இருந்து தன்னைச் சந்திப்பதற்காக வந்து கொண்டிருந்த அரி பென் கானான் உயரமாக அவளுக்குத் தெரிந்தான். அவள் தனது மூச்சை நன்றாக உள்ளிழுத்து தன் உடலில் முதன்முறை அவனைச் சந்திக்கும் போது ஊடுருவியது போன்று ஊடுருவும் உணர்ச்சி மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்றாள்.

அவன் வந்து அவருக்கு முன்னால் நின்றான். மௌனமாக, இருவரும் தலையசைத்துக் கொண்டனர். கிற்றியின் கண்கள் உணர்சிகளெதையும் காட்டவில்லை. தான் அவனது சவாலை ஏற்க வந்திருப்பதையும், அதில் தோற்றுப் போகும் நோக்கம் தனக்கில்லை என்று அவனுக்கு உணர்த்துவது போல் மௌனமாக நின்றாள்.

57ஆம் இலக்க வளாகம் பொதுவாக, வயதானவர்களையும், மத நம்பிக்கை உள்ளவர்களையும் உள்ளடக்கியிருந்தது. அழுக்கான, பராமரிக்கப்படாத ஆட்களை

**லியோன் யூறிஸ்**

உள்ளடக்கியிருந்த கூடாரங்களின் இரு வரிசைகளூடாக இருவரும் மெதுவாக நடந்தனர். தண்ணீருக்கிருந்த தட்டுப்பாடு, கிட்டத்தட்ட குளிப்பதை முடியாத காரியமாக்கி விட்டது என்று பென் அமி விளக்கினான். அத்தோடு உணவுப் பற்றாக்குறையும் இருந்தது. அங்கிருந்தவர்கள் பலவீனமாகவும், சிலர் கோபத்தோடும், சிலர் திகைப்புக்குள்ளாகியும் எல்லாரும் இறந்தவர்களின் ஆவியால் ஆட்கொள்ளப் பட்டிருப்பது போலவும் இருந்தார்கள்.

ஒரு நரைதிரை ஓடிய உருவம் ஒன்று மரத்தில் ஏதோ செதுக்கிக் கொண்டிருந்த, திறந்திருந்த கூடாரமொன்றின் முன் அவர்கள் நின்றனர். செதுக்கிக் கொண்டிருந்த சிற்பத்தை அவள் காணக் கூடியதாக அவ்வுருவம் தூக்கிக் காண்பித்தது. அது பிரார்த்தனைக்காகக் குவிக்கப்பட்ட கைகளில் சுற்றப்பட்டிருந்த முள்ளுக் கம்பியோடு கூடிய ஒரு சோடி கைகளாகும். அரி அவளில் ஏதாவது மன இளகல் காணப்படுகிறதா என உன்னிப்பாக அவதானித்தான்.

இங்கு இழிவான, அசுத்தமான, பரிதாபகரமான நிலைமை நிலவுவதை அவள் கண்டாள். ஆனால் இதைவிட மோசமான நிலைமைக்குத் தயாராக அவள் வந்திருந்தாள். அவள் தன்மீது அரி பென் கானானுக்கு எந்தவிதமான மர்மமான சக்தியும் இல்லை என்ற முடிவுக்கு வரத்தொடங்கியிருந்தாள்.

யூதவழிபாட்டிடமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு பெரிய கூடாரத்தின் முன் அவர்கள் திரும்பவும் நின்றார்கள். புகுவழிக்கு மேலே செம்மையாகப் பாடாத மெனோறாவின் அடையாளமாகிய வழிபாட்டில் பாவிக்கப்படும் கொத்து மெழுகுவர்த்தித் தண்டொன்று மரத்தில் செதுக்கப்பட்டு தொங்கவிடப்பட்டிருந்தது. அவள், முன்பின்னாக அசைந்தபடி வினோதமான செபங்களைச் செய்துகொண்டிருந்த வயோதிபர்களை வெறித் துப் பார்த்தபடி நின்றாள். கிற்றிக்கு அது வேறொரு உலகம் போல் இருந்தது. அவளுடைய பார்வை, குறிப்பாக, அழுக் கோடும் அடர்ந்த தாடியோடும், பெருங்குரலெடுத்து கதறி அழுதபடி இருந்த ஒரு வயோதிபர் மேல் நின்று கொண்டிருந்தது.

டேவிட்டின் கை அவளை நடத்திச் செல்வதை உணர்ந்தாள். அவன் ஒரு வயோதிபன், அவன் கடவுளுக்குத் தான் ஒரு விசுவாசமான வாழ்க்கையை வாழ்ந்ததாகவும், கடவுளின் ஆணைகளுக்குப் பணிந்திருந்ததாகவும் பரிசுத்த ரோறா (Torah–யூதமதப் புத்தகம்) வின் படி ஒழுகியதாகவும், கடவுளோடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களை கஸ்டங்களின் மத்தியிலும் முறிக்காததாகவும் சொல்கிறான் நல்லவனாய் வாழ்வதற்காக தன்னை "இன்பதுன்பங்களிலிருந்தும் விடுவிக்க கேட்கிறான்" என்றான் டேவிட்.

"இங்கிருக்கும் வயோதிபர்களுக்குத் தங்களை இரட்சிக்கக்கூடிய மெசியா (Messiah–இரட்சகர்) ஒரு துவக்கு முனையில் இருக்கும் பயனைற்கத்திதான் என்று தெரியாது" என்றான் அரி.

கிற்றி அரியை நோக்கினாள். இந்த மனிதனுக்குள் பயங்கரமான ஏதோ இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாள்.

கிற்றியுள் தோன்றிய வெறுப்புணர்ச்சியை அரி உணர்ந்து கொண்டான். அவனது கைகள் அவளது கைகளைப் பற்றிக் கொண்டன. சொன்டர் கொமாண்டோ ( Sonder Kommando) என்பது என்ன என்று உனக்குத் தெரியுமா? "அரி தயவு செய்து... வேண்டாம்..." டேவிட் கூறினான். "சொன்டர் கொமாண்டோ என்பது ஜெர்மன் இராணுவத்தினர் தாங்கள் பிணங்களை எரித்த இடங்களில் கட்டாய சேவையில் ஈடுபடுபவர்களைக் குறிக்கும் சொல்" இங்கிருக்கும் இன்னொரு வயோதிபரை உனக்கு காட்ட நான் விரும்புகிறேன். புச்சன்வால்ட் (Buchenwald - யூதர் கொல்லப்பட்ட சித்திரவதை முகாம்களில் ஒன்று) தகன அறைகளில் தன் பேரப்பிள்ளைகளின் எலும்புகளை எடுத்து ஒரு தள்ளுவண்டியில் எடுத்துச் சென்று வீசியிருக்கிறார். குக் மாகாண ஆஸ்பத்திரியில் இவைகளைவிடக் கொடுமையானவைகளை நீ கண்டிருக்கிறாயா என எனக்குச் சொல்" என்றான் அரி.

கிற்றிக்கு வயிற்றைப் பிரட்டிக் கொண்டு வருவது போல் இருந்தது. பொங்கிவந்த கோபத்தினால் கண்களில் நீர் நிறைய அவள் திரும்பிச் சீறினாள். "உனக்குத் தேவையானது கிடைக்கும் வரை ஒன்றுமே உன்னை நிறுத்த முடியாது அல்லவா?"

"நாங்கள் எவ்வளவு நிற்கதியான நிலையில் இருக்கிறோம் என்பதை உனக்குக் காட்டும்வரை நான் ஓயப்போவதில்லை."

இருவரும் ஒருவரை ஒருவர் மௌனமாகப் பார்த்தபடி நின்றனர்.

"நீ பிள்ளைகளின் வளாகத்தைப் பார்க்க விரும்புகிறாயா? இல்லையா?" கடைசியாக அவன் கேட்டான்.

"அதையும் பார்த்து முடிப்போம்" கிற்றி பதிலிறுத்தாள்.

மூன்று பேரும் முட்கம்பி வேலிகட்கு மேலால் பிள்ளைகளின் வளாகத்துக்குள் சென்று போரின் இரக்கமற்ற அறுவடைகளைப் பார்த்தனர். அவள் ஆஸ்பத்திரிக் கட்டிடத்தின் ஊடாக காச நோயாளர்களின் நீண்ட வரிசைகளையும், வேறு பிரிவுகளில் இருந்த கணைச்சூட்டு நோயால் (Rickets) வளைந்த எலும்புகளையுடைய பிள்ளைகளையும், மஞ்சள் காமாலை நோயால் மஞ்சளான தோல்களையுடைய பிள்ளைகளையும், இரத்தம் நஞ்சேறியதால் ஏற்பட்ட சீழ் வடிந்து கொண்டிருக்கும் புண்களையும் உடைய பிள்ளைகளையும் பார்வை யிட்டபடி சென்றாள். பின்பு பூட்டப்பட்ட அறையினுள் நிலைத்த வெறுமையான பார்வைகளுடன் இருந்த மனநிலை பாதிககப்பட்ட இளைஞர்களையும் பார்வையிட்டாள்.

1940–45களின் பட்டதாரிகள் அணிவகுப்பை அடுத்துப் பார்வையிட்டனர். யூத சேரிகள் அளித்த பட்டம் பெற்றோர், சித்திரவதை முகாம்களின் பாடங்களைக் கற்றவர்கள், இடிபாடுகளில் கல்விமான்களானவர்கள், தாயற்ற, தந்தையற்ற, வசிப்பிடமற்றவர்கள், தொற்று நீக்கப்பட்டோரின் மழிக்கப்பட்ட தலைகள், கிழிந்த உடுப்புக்களை அணிந்தோர், பயம் நிரம்பி வழிந்த முகங்கள், கட்டிலை நனைப்போர், இரவில் அலறுவோர் என அணிவகுப்பு நீண்டு சென்றது. வீரிடுகின்ற குழந்தைகள், அலறுகின்ற சிறுவர்கள், எல்லோருமே தங்கள் தந்திரோபாயங்களினால் உயிர் தப்பி எஞ்சியிருந்தவர்கள்.

அவர்கள் பார்வையிடுதலை முடித்துக் கொண்டனர். "உங்களுக்குச் சிறந்த மருத்துவ ஆளணி இருக்கிறது. குழந்தைகளின் வளாகத்துக்குக் கிடைக்கும் பொருள்களில் சிறந்தவை கிடைக்கின்றது." என்றாள் கிற்றி.

"பிரிட்டிஷார் இதில் எதையும் தரவில்லை" வெடித்தான் அரி. "எமது சொந்த மக்களே இவற்றை நன்கொடையாக அளித்திருக்கின்றனர்."

"அங்கேயே உன் கருத்தை நிலை நிறுத்திவிட்டாய். உன்னுடைய பொருட்கள் சொற்கத்தில் இருந்து கிடைத்த மன்னாவாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. என்னுடைய அமெரிக்க மனச்சாட்சியின் குரலுக்கு செவிசாய்த்தே நான் வந்தேன். அதற்குத் திருப்தியாகி விட்டது. நான் போகவேண்டும்."

"திருமதி. பிறமென்ற்..." டேவிட் பென் அமி தொடங்கினான்.

தொடரும்...

இழப்பதற்கு எதுவுமில்லை..! இருப்பதற்கு இனிய நாடு ஒன்று போதும் என்ற உணர்வோடு ஒரு கையில் துப்பாக்கி! மறுகையில் மண்வெட்டி! ஊனின்றி, உறக்கமின்றி, வியர்வையையும், இரத்தத்தையும் விலையாகக் கொடுத்து, விலைமதிப்பில்லாத் தங்கள் தாயகத்தை மீட்டெடுக்கின்றார்கள்.

www.tamilarangam.net






# ஐக்கிய நாடுகள் சபை:

## செயலாளர் நாயகத்துக்கான பதவி: வெற்றி பெறப்போவது யார்?

உலகின் மிகவும் மதிப்புக்குரிய ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கான போட்டியில் இருந்து தான் விலகிக் கொள்வதாக தற்போதைய செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி டிசம்பர் மாதம் 4ஆம் திகதி அறிவித்துள்ளார். 74 வயதான முன்னாள் எகிப்திய ராஜ தந்திரியான இவரின் இம் முடிவுக்கு அமெரிக்காவின் நெருக்குதலே காரணம்



தற்போதைய செயலாளர்
பூட்ரஸ் பூட்ரஸ் காலி

எனக் கூறப்படுகிறது.

எனினும், இவரது இம் முடிவு பற்றி முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன. பூட்ரஸ் காலி அவர்கள் தனது நியமனத் தாக்கலைத் 'தற்காலிகமாக' இடைநிறுத்தம் செய்துள்ளார் என ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தலைவர் அறிவித்துள்ள அதேவேளை, இரண்டாவது வாக்குப் பதிவுக்குத் தனது பெயரை முன்வைக்க வேண்டாம் என்று மட்டுமே தற்போதைக்கு பூட்ரஸ் காலி அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார் என அவரது பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பூட்ரஸ் காலி அவர்கள் செயலாளர் நாயகம் பதவியில் இருந்து விலகுவதற்காக – சர்வதேச அறக் கட்டளைத் தாபனம் ஒன்றிற்கான தலைவர் பதவி தரப்படும் என்றும், செயலாளர் நாயகம் பதவியில் இருந்து கௌரவமாக ஓய்வு பெற்றவர் எனும் புதிய அந்தஸ்து வழங்கப்படும்

சாள்ஸ் தேவசகாயம்

என்றும் அமெரிக்கா ஆசை காட்டியது எனும் வதந்தி நிலவிக் கொண்டிருந்த வேளையிலேயே பூட்ரஸ் காலியின் இவ் அறிவித்தல் வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் இப் பிரேரணையை பூட்ரஸ் காலி நிராகரித்துவிட்டார் என இவ் விடயம் பற்றிப் பரிச்சயமான ராஜதந்திரிகள் தெரிவித்ததாக அறிய வருகிறது.

பூட்ரஸ் காலியின் பதவிக் காலம் டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைகிறது. ஆனால் அவர் மீண்டும் இப் பதவிக்குப் போட்டியிட்டால் தாம் அவரது தெரிவை 'வீற்றோ' (veto) அதிகாரத்தைப் பிரயோகித்து செல்லுபடியற்றதாக்குவோம் என கடந்த கோடை காலத்தில் கிளின்டன் நிர்வாகம் அறிவித்திருந்தது. அமெரிக்காவின் இவ் அடாவடித்தனமான செய்கை மீது தமது அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையிலும், சர்வதேச சமூகத்தின் ஒற்றுமையையும் ஆதரவையும் தெரிவிப்ப தற்கும் பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் 14 நாடுகள் நவம்பர் மாதம் பூட்ரஸ் காலியை அங்கீகரித்து வாக்களித்தமை இங்கு கவனிக்கத்தக்கது.

செயலாளர் நாயகத்தின் இடத்திற்கு வேறொருவரைப் பிரேரிக்கும்படி ஆபிரிக்க ஐக்கிய அமைப்பின் தலைவர் ஆபிரிக்க அங்கத்துவ நாடுகளைக் கேட்டுக் கொண்டதற்கும் மாறாக, பூட்ரஸ் காலியே தமது பிரதிநிதி அல்லது வேட்பாளர் எனப் பல ஆபிரிக்க ராஜதந்திரிகள் வலியுறுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும், அமெரிக்காவுடன் நீண்ட சமர் புரிவதை விடுத்துத் தனது வேட்பாளர் நியமனப் பத்திரத்தை வாபஸ் வாங்கும்படி பூட்ரஸ் காலியின் நண்பர்கள் தனிப்பட்ட முறையிலும், பகிரங்கமாகவும் அறிவுறுத்தியுள்ளனர்.

"நீர் இப்போது போட்டியில் இருந்தும் விலகினால் வரலாற்றில் மகானாகப் போற்றப்படுவீர். அல்லாவிடில் வரலாற்றின் அடிக்குறிப்பாகவே கணிக்கப்படுவீர்" எனப் பூட்ரஸ் காலியின் 30 ஆண்டு கால நண்பனும், அரபு நாடுகள் கூட்டமைப்பின் முன்னாள் தூதுவருமான குளோரிஸ் மக்சோட் அறிவுறுத்தினார் என அறிய வருகிறது. மேலும், "ஐ.நா. பொதுச் சபையில் இறுதி உரையை நிகழ்த்தி வாரிசு ஒருவருக்கான வழியைத் திறந்து விட வேண்டும்" எனவும் மக்சோட் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

இதேவேளை, ஐ.நா. சபை யாரைச் செயலாளர் நாயகமாகத் தெரிய வேண்டும் என அறிவுறுத்தத் தாம் விரும்பவில்லை என அமெரிக்க அதிகாரிகள் உணர்த்தியுள்ளனர்.

"ஒரு குறிப்பிட்ட வேட்பாளருடன் தம்மை அடையாளம் காட்டுவது அவரது நலன்களுக்கு உசிதமான ஒன்றல்ல" எனக் கூறிய வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர், "நாம் ஏனையோரை உகந்த வேட்பாளரைப் பிரேரிக்கும்படி ஊக்குவிக்குபோம். பிற்பாடு அவரைப் பற்றிக் கவனமாக ஆராய்வோம்" எனக் கூறியுள்ளார்.

இதேசமயம், "அமெரிக்காவினால் விரும்பப்படும் எவரும் ஏனைய நாடுகளின் ஆதரவினைப் பெறப் போவதில்லை" என அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். "ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த எவர் வந்தாலும் சம்மதமே" எனும் போக்கே அமெரிக்க அதிகாரிகள் மத்தியில் நிலவுகிறது என ஒரு ராஜதந்திரி வேடிக்கையாகக் கூறியுள்ளார்.

ஒவ்வொரு பிரதேசத்தில் இருந்தும் சுழற்சி முறையில் இரண்டு தவணைகளுக்கு செயலாளர் நாயகம் பதவிக்கு ஒருவர் தெரியப்படல் வேண்டும் என்பதே பாரம்பரிய வழமையாகும். ஆபிரிக்க நாடான எகிப்தில் இருந்து வந்த பூட்ரஸ் காலி பதவி விலக வேண்டும். அதேசமயம் இரண்டாவது தவணைக்கு ஆபிரிக்க நாடுகள் எவரையும் பிரேரிக்கலாம் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாக உள்ளது.

இதன் விளைவாக, பலரின் கவனம் ஆபிரிக்க ராஜதந்திரிகள் சிலரின் பக்கம் திரும்பியுள்ளது. ஐ.நா. சபையின் உதவிச் செயலாளர் நாயகமான, கானா தேசத்தைச் சேர்ந்த கொபி அன்னன் அவர்கள் ஐ.நா. சமாதான நடவடிக்கைகளுக்குத் தலைமை வகிப்பதுடன் ஜெனிவாவில் 5 ஆண்டு காலமாகச் சேவையாற்றியும் வந்துள்ளார். ஐ.நா. விடயங்களில் அனுபவம் வாய்ந்த இவர், அமைதி காக்கும் விடயங்களில் திறமையாகச் செயற்பட்டு அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தினரிடையே நன்மதிப்பைப் பெற்றுள்ளார் என அறிய வருகிறது.

ஆபிரிக்க நாடான சியரா லியோனின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் முன்னின்று உழைத்தவர் எனும் ரீதியில் ஐவரி கோஸ்ட் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அமாரா எஸ்ஸி என்பவரின் பெயரும் அடிபடுகிறது. இவரிடம் பிரான்சியப் பின்னணி இருப்பதால் பிரான்சும் இவரது நியமனத்துக்கு ஆதரவாக உள்ளது.

செனிகலின் வெளிவிவகார அமைச்சர் முஸ்தபா நியாஸ் என்பவரின் பெயரும் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும் செனிகல் தேசம் தாய்வானை அங்கீகரித்துள்ளதால் சீன மக்கள் குடியரசு, தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பாவித்து அவரைத் தோற்கடிக்கும் எனவும் கூறப்படுகின்றது.

உகண்டாவின் முன்னாள் தூதுவரான ஒலாரா ஒட்டுண்ணு என்பவர் தற்போது நியூயோர்க்கில் இருந்து இயங்கும் சர்வதேச சமாதான நிலையத்திற்குத் தலைமை வகித்து வருகிறார் என்றாலும் உகண்டாவின் ஆதரவு அவருக்கில்லாததால் அவர் வெற்றி பெறுவது கடினம் என்று கருதப்படுகிறது.

மொறிட்டானியாவைச் சேர்ந்த அகமது அப்துல்லா என்பவரும் இப்போட்டியில் கலந்து கொள்வதாக அறிவித்துள்ளார். இவர் புறுண்டிக்கான ஐ.நா. சபையின் விசேட பிரதிநிதியாகக் கடமையாற்றியவர் என்பதுடன், தற்போது வாசிங்டனில் உள்ள ஆபிரிக்கக் குழுவுக்கான சர்வதேசக் கூட்டமைப்பின் உப தலைவராகவும் கடமையாற்றி வருகிறார்.

மேலும், இஸ்லாமிய மகாநாட்டுத் தாபனத்தின் செயலாளர் நாயகமாக விளங்கும் நைகர் தேசத்தைச் சேர்ந்த கமீட் அல்காபிட் என்பவரும் தனது போட்டியிடும் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிப்பதில் காலம் விரயமாக்கப்பட்டால் அக் கண்டத்துக்கு வெளியில் உள்ளவர்களையும் போட்டியில் சேர்க்க வேண்டி வரும் என்ற கருத்தும் நிலவுகிறது. உதாரணமாக நோர்வேயின் முன்னாள் பிரதமர் குரோ கார்லம், யப்பானைச் சேர்ந்த அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் இடாக்கோ ஒகடா போன்றவர்களும் போட்டியில் சேர்ந்து கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது.

செயலாளர் நாயகம் பதவியில் தான் ஒரு தவணை மட்டும் கடமையாற்றுவேன் என்றே பூட்ரஸ் காலி ஆரம்பத்தில் கூறியிருந்தார்.

ஆனால் இரண்டாவது தடவையும் போட்டியிடப் போவதாக அவர் தீர்மானித்த போது துரதிர்ஷ்டவசமாக கிளிண்டன் நிர்வாகத்தினருடனான உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியது.

சோமாலியாவில் 18 அமெரிக்கத் துருப்பினர் கொல்லப்பட்டதற்குப் பூட்ரஸ் காலியே பொறுப்பேற்க வேண்டும் என கிளிண்டன் நிர்வாகத்தினர் முக்கியமாகக் குற்றம் சுமத்தினர்.

பிந்திக் கிடைத்த செய்திகளின் படி டிசம்பர் 9ந் திகதி வரை கானா, ஐவரி கோஸ்ட், நைகர், மற்றும் மொறிட்டானியா எனும் நாடுகள் உத்தியோக பூர்வமாக தமது நாட்டு வேட்பாளர்களை நியமித்துள்ளனர் என அறிய வருகிறது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை இவர்களுக்கான ஆதரவு மட்டம் எவ்வாறுள்ளன என சம்பிரதாய பூர்வமற்ற கணிப்பீடுகளைச் செய்தபின் வேறு சில பெயர்களும் பிரேரிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை உலகின் மிக முக்கியமான பதவிக்கான போட்டி மேலும் சூடு பிடித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சில நாட்டு சனாதிபதிகள் தமக்கு வேண்டியவருக்கு ஆதரவு தேடும் அதேவேளை தென்னாபிரிக்காவின் சனாதிபதியான நெல்சன் மண்டேலா தான் ஆதரிக்கும் வேட்பாளருக்கெதிராக பிரான்ஸ் தனது வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகிக்கவுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

"ஆபிரிக்க ஒற்றுமைக்கான தாபனத்தின் செயலாளர் நாயகமான தான்சானியாவைச் சேர்ந்த சாலிம் அகமட் சாலிம் என்பவரே பூட்ரஸ் காலியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கான தகுதி வாய்ந்தவர்" என கேப்டவுனில் இடம் பெற்ற பத்திரிக்கையாளர் மகாநாட்டில் நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார். "இவ் ஆபிரிக்க ஒற்றுமைக்கான தாபனத்தின் செயலாளர் நாயகமாக இவர் திறம்படச் செயலாற்றியுள்ளார்" என மண்டேலா சிபார்சு செய்துள்ளார்.

மேற்காபிரிக்காவின் பிரான்சிய மொழி பேசும் நாடான டோகோவிற்கு விஜயம் செய்த பிரான்சிய சனாதிபதி ஜக்குவே சிராக் தனது வீட்டோ அதிகாரத்தை சாலிமுக்கு எதிராகப் பாவிக்கப் போவதாகக் கூறியதாக மண்டேலா தெரிவித்தார்.

"நான் ஜக்குவே சிராக்குடன் நீண்ட நேரம் தொலைபேசியில் நேற்று இரவு உரையாற்றினேன். ஐ.நா. செயலாளர் பதவிக்கான வேட்பாளர் ஆங்கிலத்திலும், பிரான்சிய மொழியிலும் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் அவசியம்" எனச் சிராக் கூறியதாகவும், இதன் அடிப்படையில் சாலிமுக்கெதிராக வீட்டோவைப் பாவிப்பேன்" எனக் கூறியதாகவும் டிசம்பர் 8ம் திகதி நடந்த அம் மகாநாட்டில் மண்டேலா தெரிவித்தார்.

இவ்வாறு இவர்கள் அடிபடுவதனை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கும் தனிப்பெரும் வல்லரசான அமெரிக்கா இறுதியில் யாரை அங்கீகரிக்கும் என்பதே இன்று பலர் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## “மௌனத்தை கலைப்பாயா?”

இன்றும் -
இரண்டாயிரம் ஆண்டுகளின்
பின்னரும்
நன்றி உணர்வோடு
அந்த மகானை
நினைவு கொள்கிறீரே!
மாண்புசால் மேற்குலகே
உனது தெய்வீகத்
தன்மைகொள்
மனித நேயம்
போற்றுதற்குரியது
தலை வணங்குகிறோம்.

என் பாட்டன் -
உனது பட்டாளக்காரனுக்கு
‘புட்டவித்த’ சமையற்காரன் -
தன் வாய் நிறைய
உந்தன்
வரலாறு உணர்த்தியவர்.
எந்தன் -
சின்னவயதினிலே
என் மண்டை கொள்ளாது
பிய்த்துக் கொண்ட காலமது.

அறிவு முதிர்ந்து
மண்டை தரவையாகி
இன்றுதான் உன்னை
நேரில் பார்க்கிறேன்.
துன்பப்பட்டவர்க்காக
துயரப்பட்டவர்க்காக
சிலுவை சுமந்தவரை
இயேசு மகானை
இன்றும்
நன்றி உணர்வோடு
நினைவில் கொள்கிறீரே!

மக்கள் துயரையெல்லாம்
தன் மனதில் வாங்கியதால்
முட்களினால் அன்று
சிலுவையில் அறையப்பட்டார்
அந்தத் தேவனை
இன்றும்... இன்றும்....
உமக்குத்
தலைவணங்குகிறோம்.

உன் மடியில்
வேண்டாப் பிள்ளையாக
கருத்தரித்த குழந்தைக்கு -
அழையாது
விருந்துக்கு உள்நுழைந்த
எந்தனுக்கு -
ஆனாலும்....
இன்றும் ஓர் விடயம்
என்னால் புரிந்துகொள்ள
முடியவில்லை.

இந்த ஆண்டில் -
இன்றைய நாட்களில் -
எங்களது மண்ணில்
எத்தனை மக்கள்
இம்சிக்கப்பட்டார்கள்?
எத்தனை பாலகர்கள்
இயேசு பாலன் முன்னால்
வதம் செய்யப்பட்டார்கள்
அங்கு துயரப்படும்
மக்களுக்காய்
எத்தனை இயேசு மகான்கள்
தங்கள் உயிர்ப்பூவைக்
கருக்கினார்கள்
இன்னும் ஏன் ?
மேற்குலகே !
இன்னும் ஏன் நீ
மௌனமாய் இருக்கின்றாய்
இவர்போல் இன்னும்
எத்தனை இயேசு
பிறக்கவேண்டும்
உன் மௌனத்தைக்
கலைத்துக் கொள்ள?

- வதனிலா -

---

## அறைகூவல்!

தமிழ் மண்ணே
என்னருமைத் தமிழினமே
தளராதே
நிமிர்ந்து நில்!

என்றுமில்லை
தோல்வி உனக்கு!
இதுதான்
உனது வெற்றிக்கான
இறுதிப்படி!

புல்லுக்கும் மீசை முளைக்கும்
இந்த மண்ணில்
பேடிகள் வாகை சூடுவதா?

வீரம் விளைநிலமாம்
ஈழமண்ணிலே
இன்னும்
எதிரி நிலைப்பதா?

வீடிழந்து நாடிழந்து
ஏதிலிகளாய்
எமது மக்கள்
வீதிகளில் அலைவதா?

நேர்நின்று
பொருதத் திராணியற்று
கோழைத்தனமாக
எமது மண்ணை
எதிரி ஆக்கிரமிக்கிறான்
‘ஆண்ட பரம்பரை’ நாமென்று
இதுவரை சொன்னோம்
‘அகதிப் பரம்பரை’ நாமென்று
இனி எம்
சந்ததி சொல்லப்போகிறதே!

உரிமைகள்
உடமைகள்
எம்முன்னோர்
வாழ்ந்ததற்கான
வரலாற்று ஆவணங்கள்
மட்டுமல்ல...
எமது மானமும்
இந்த மண்ணில்தான்
மாண்டு கிடக்கிறது!

இது வெறும்
உரிமைப்போர் அல்ல....
தமிழனின் தன்மானப் போர்!

போர்க்களத்தில்
ஒப்பாரி வேண்டாம்!

காலம் இனி இல்லை
கண்ணீர் துடைத்து
புலிகள் பின்னால்
அணி திரள்வோம்!

போர்முரசு ஒலிக்கட்டும்!
புறப்படுவோம் களம்நோக்கி!
எதிரிபடை சிதறடித்து...

எமது மண்ணை
மீட்டெடுப்போம்!

–துறையூரான்–

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் பயணத்தில் 96...

சனவரி 22 : சிறிலங்கா விமானப்படைக்க சொந்தமான MI-17 ரக உலங்கு வானூர்தி விடுதலைப் புலிகளால் வெற்றிலைக் கேணிக்கு அருகாமையில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் மூன்று இராணுவ அதிகாரிகள், ஒரு கடற்படை அதிகாரி இருவிமானப்படை அதிகாரிகள் உட்பட 39 பேர் பலியாகினர்.







மார்ச்சு 15: மன்னார் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையின் மீது கடற்புலிகள் நடாத்திய தாக்குதலில் 2 அதிவேகப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு படகு கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டது.

மார்ச்சு 23: மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறு மூலையில் சிறிலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் அதிரடிப் படையணி பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தியது. இத்தாக்குதலில் 40 படையினர் கொல்லப்பட்டு மேலும் 15 பேர் காயமுற்றனர்.



யூலை 1: திருமலை மாவட்டம் கந்தளாய் பகுதியில் புலிகள் நடாத்திய பெரும் தாக்குதலில் ஒரு இராணுவ அணி முற்றாக அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் 2 அதிகாரிகள் உட்பட 32 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு பவள் கவச வாகனமும் அழிக்கப்பட்டது.



யூலை 4 · யாழ்ப்பாணம். ஸ்ரான்லி வீதியில் தற்கொலைப் பணியிலான குண்டுத்தாக்குதலில் பிரிகேடியர் ஆனந்த கமலகொடி, சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆர். குணவர்த்தன மற்றும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

யூலை 18 : தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகப்பெரிய தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது அதிகாலை 1.30 மணிக்கு மேற்கொண்டனர். 1200க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு முகாம் விடுதலைப்புலிகளின் பூரணகட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. 332 விடுதலைப் புலிகள் வீரச் சாவை தழுவிக் கொண்டனர்.





டிசம்பர் 11: புக்குனாவை அதிரடிப்படை முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி நிர்மூலமாக்கப்பட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். 85 மில்லி மட்டர் ஆட்டிலரி உட்பட்ட ஏராளமான ஆயுதங்கள், தோட்டாக்கள், வெடிபொருட்கள், வாகனங்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இருபத்தியாறு வேங்கைகள் வீரமரணம் எய்தினர்.



யூன் 11: காரைநகர் கடற்படைத்தளத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரத் தாக்குதலில் கடற்படையின் 3 ரோந்துப் படகுகள் முற்றாகச் சிதறடிக்கப்பட்டன. இத்தாக்குதலில் கடற்கரும்புலி மேஜர் ரம்போ (பொன்னையா தமிழ் செல்வன், ஓமந்தை) வீரச் சாவைத்தழுவிக் கொண்டார்.

டிசம்பர் 17 : கிழக்கில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையின் தலைமை அதிகாரி உபாலி சகபந்து ஜீப் வண்டியில் சென்றுகொண்டிருந்த போது கரும்புலித்தாக்குதலுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டார்.